பட்டுக்கோட்டை

பிரபாகர்

# ஓடாதே, துரத்தாதே!






பூமியை விட்டு ஒரு அடி மேலே மிதந்தபடி நடப்பவர்களை நம்பியிருக்கும் மகா பெரிய ஹோட்டலில் தலையில் ஒரு துணி விசிறித் தொப்பி வைத்த கதவு திறப்போன் ஐந்து போட்டு சைபர் ரூபாய்க்கு குறைவாக நீட்டப்பட்டால் 'ஸாரி' என்பான். யாரும் நீட்டுவதில்லை.

கார் வாங்கத் தீர்மானித்த அன்பர்கள் எந்தக் கார், எந்தக் கலர் என்று முடிவு செய்ய இங்கே வந்தால் போதும். திகட்டும் வரை பார்த்துத் தீர்மானிக்கலாம்.

ஒரு ஏக்கர் ரிஸப்ஷன். சன்ன மியூசிக்கோடு ஃபவுண்டன், பியூட்டி கான்டெஸ்ட்டுக்குப் போக வேண்டிய ரிஸப்ஷனிஸ்ட்ஸ். அவர்களின் மின்னும் லிப்ஸ்டிக் உதடுகள். குட்டிச் செயின்களின் முடிவில் குட்டி டாலர்கள். ஆரம்ப வளைவுகளுக்குள் சிக்கி... வறுமையின் நிறம் சிவப்பில் பிரதாப் போத்தன் ஸ்ரீதேவியிடம் 'அந்த ஐஸ்க்ரீமா நான் இருக்கக் கூடாதான்னு நினைக்கிறேன்' என்பது போல இங்கே 'அந்த டாலரா நான் இருக்கக் கூடாதா' என்று நீங்கள் நினைப்பீர்கள்.

மஸாஜ் கிளப், சலூன், பியூட்டி பார்லர், ஹெல்த் கிளப், ஸ்டீம் பாத், பொக்கே ஷாப், டிராவல்ஸ் ஆபீஸ், பாசிமணி மாலை ஒன்று ரூ.675.50க்கு விற்கும் டை கட்டின ஸேல்ஸ்மேன் கொண்ட கடை, நீச்சல்குளம், புல்வெளி, முயல்கள், மொத்த ஹாலுக்கும் மூன்றே மூன்று நாற்பது வாட்ஸ் பல்ப் கொண்ட, முகத்தை சௌகரியமாக ஒளித்துக் கொள்ள முடிகிற சில்ஹவுட் பார், சதா தண்ணி பார்ட்டி நடக்கின்ற ஹாலுக்கு கான்ஃபெரன்ஸ் ஹால் என்று பெயர்.

ஆறு மாடியில் மொத்தம் எண்பத்தி எட்டு அறைகள், ஏற இறங்க மூன்று ஃலிப்டுகள், ஒவ்வொரு அறையும் கால் கிரவுண்டு. ஒரு டூரிஸ்ட் பஸ் முழுக்க படுத்து மீதி இடத்தில் கீரி, பாம்பு வைத்து வித்தை காட்டலாம்.

மூன்றாவது மாடியில் 307-ம் எண் அறையின் ஜன்னலைத் திறந்து சிட்அவுட்டிற்கு வர... அம்மன் தரிசனம், நீச்சல் குளத்தில் குளிக்கிற, நீள சாய்வுப் படுக்கையில் நீட்டிப் படுத்து மெனக்கெட்டு நிறத்தை சாயல் மாற்றுகிற வெள்ளைக்கார அம்மன்கள், பெரும்பாலும் டூ பீஸ், பிரவுன் கூந்தல் அம்மன்கள்.

ஆனால் அந்த அறையில் கிரண் அதை ரசிக்கவில்லை.



அவன் பார்வை கட்டில் மேல் இருந்தது. அதில் அவள் சுவரில் உள்ள ஓவியம் மாதிரியே படுத்திருந்தாள்.

சுவரில் ஓவியப் பெண்களை வரைந்த தூரிகைக்காரனுக்கு அநியாய மறதி. ஆடை தவிர எல்லாம் அணிவித்திருந்தான். கற்பெண்ணவோ கண்களில் இருப்பது போல கூலிங் கிளாஸ்.

கிரண் தன் சிகரெட்டை ஆஷ்ட்ரேயில் சட்னி செய்துவிட்டு அவளைச் சமீபித்தான். நகர்ந்து இடம் கொடுத்தாள். அதிர்ந்து நின்றன. படுத்துக் கொண்டு அணைத்துக் கொண்டு, "என்ன காயம் இது?" என்றான்.

"புலி நகம்!" என்றாள்.

"எந்த காடு!"

"பாலக்காடு! ஆயாள் செயின்ல புலிநக டாலர் மனசிலாயி?"

"எல்லா ஸ்டேட் பர்மிட்டும் வெச்சிருக்கியா?"

"ஆல் இண்டியாவாக்கும். போன மாசம் பம்பாய்ல பத்து நாள். அவன் பேரு சின்ஹா. சின்னப் பையன். இருபது வயசு. கல்யாணம் நிச்சயமாயிருக்காம். முன் அனுபவம் இல்லாம எந்த காரியத்திலயும் இறங்க மாட்டானாம் அவா."

"கத்துக் கொடுக்க பத்து நாளாச்சா உனக்கு?"

"எல்லாம் டூப்பு. அவன்தான் புதுசா ரெண்டு கத்துக் கொடுத்தான்."

"அறுபத்தி அஞ்சும், அறுபத்தி ஆறுமா?"

"ஹாரிபிள்! என்னை ஒரு மனுஷியாவே நினைக்கலை."

"வேற எப்படி?"

"உயிருள்ள ஒரு தலையணை! நினைச்சா தலைக்கு. நினைச்சா காலுக்கு. நினைச்சா நெஞ்சுல, நினைச்சா முதுகுக்குக் கீழே..."

"போதும். நேரமாகுது."

அவள் உதடுகளை தன் உதடுகளால் நிரப்பினான்.

அப்புறம்... அதாவது அடிக்கோடிட வேண்டிய அப்புறம்.

அவள் முதுகைக் காட்டி, கண்களால் கெஞ்ச, இரண்டு முனைகளையும் இழுத்து கொக்கி போட்டு விட்டு குனிந்து தன் பேண்ட்டை எடுத்தான்.

பூராவும் அணிந்து கண்ணாடி முன்னால் [illegible]னை சரி செய்து கொண்டு வந்த பிறகு அவளைப் பார்த்தால்... ஜன்னல் கம்பியைப் பிடித்துக் கொண்டு விழியின் ஓரத்தில் கனவு கண்டு கல்யாணத்திற்குக் காத்திருப்பதாகக் கவிதைகளில் எழுதுவார்களே, அப்படி ஒரு சராசரி குடும்பப் பெண்ணாகத்தான் தெரிந்தாள்.

கிரண் தான் பற்ற வைத்துக் கொண்டு நீட்டிய போது, சாக்லெட் எடுத்துக் கொள்வதைப் போலத்தான் சிக ரெட்டை எடுத்துக் கொண்டாள்.

சிட்-அவுட்டில் வந்து அமர்ந்ததும் அவளையே எழுபத்தி இரண்டு விநாடிகள் பார்த்துக் கொண்டிருந்து விட்டு, "ரொம்ப நாளா உன்னை ஒரு விஷயம் கேக் கணும்னு நினைக்கிறேன்" என்றான்.

"தெரியும்" என்றாள்.

"என்ன?"

"நான் எப்படி வழுக்கி விழுந்தேன்? அதானே!"

"பயங்கர புத்திசாலி நீ!"

"இல்லை! அனுபவம்! கட்டிலுக்குப் போறதுக்கு முன்னாடி என்னை ஒரு நிமிஷம் யாராச்சும் உத்துப் பார்த்தா அப்போ என்ன கேள்வி வரும்னு தெரியும். அதே மாதிரி புறப்படறதுக்கு முன்னாடிப் பார்த்துக் கேட்டா இந்தக் கேள்விதான்."

"அப்போ பதிலை எழுதி ஜெராக்ஸ் பண்ணி வெச்சுட வேண்டியதுதானே?"

"கட்டுப்படியாகாது. பிரிண்ட் தான் செய்யணும்."

"நாட்டி கர்ள்! சொல்லேன்."

"வேணாம் கிரண். சார்ம் போயிடும். மறுபடி என்னைக் கூப்பட மாட்டிங்க. விட்டுடுங்க." என்றவள் கையை உதறி நேரம் பார்த்தாள்.

"புறப்படணுமா?"

"காத்திக்கிட்டிருப்பார்."

"புருஷனா?"

"பார்ட்டி!" எழுந்து கொண்டாள்.

கிரண் தன் மணி பர்சை எடுத்து அவள் முன்னால் பிடித்து, "உனக்கு வேண்டியதை எடுத்துக்கோ" என்றான்.

அவள் இரண்டு ஐநூறு ரூபாய் நோட்டுக்களை எடுத்துக் கொண்டு, "எப்பவுமே நியாய விலைதான்" என்று கண்ணடித்து விட்டு நடக்க... தொலைபேசி ஒலித்தது. எழுந்து வந்து எடுத்தான். "கிரண் ஹியர்."

"அலெக்ஸ் பேசறேன். பிஸியா இருக்கியா?"

"இல்லை. போயாச்சு, சொல்லு."

"நேர்ல வர்றேன்."

"ராவ் வர்றானா?"

"நான் அவனையும் பிக்கப் பண்ணிட்டு வந்துடறேன்."

"வாங்க" என்று வைத்து விட்டு மீண்டும் சிட் அவுட் வந்து டைவிங் போர்டில் இருந்து குதித்த, மின்னும் தொடைகளைப் பார்த்தான் கிரண். அரைமணி நேரத்தில் அலெக்சும், ராவும் வந்து சேர்ந்து ராவ் கட்டிலில் கிடந்த இரண்டு மல்லிகை மொட்டுகளை எடுத்து கிரண் மேல் வீசி, "ஏண்டா ஸண்டே ஹாலிடே கூடக் கிடையாதா?" என்றான்.

"ஸண்டே அன்னைக்கு நீ பல் துலக்கறதில்லையா ராவ்?" என்றான் கிரண்.

"நீ வேணும்னா பாரு, ஒரு நாளைக்கு இடுப்பு எலும்பு லொடக்குன்னு உடையத்தான் போகுது. யாரு ஜெய ரேகாவா?"

"நீ புத்தன்னா எதுக்கு அட்ரஸ் கேக்கறே?"

"ச்சே! நான் எப்ப புத்தன்னு சொன்னேன்? ஆனா உன் அளவுக்கு மோசம் இல்லை. ஸண்டே ஹாலிடே கண் டிப்பா விட்டுடறதுண்டு."

"இந்த வாக்குவாதத்துக்காக இப்போ நாம இங்கே கூடலை!" என்றான் அலெக்ஸ் குரல் உயர்த்தி.

ஆர்டர் சொல்லப்பட்ட பீர் பாட்டில்கள் வந்ததும், உடைத்துக் கவிழ்த்துக் கொண்டு, ஆளுக்கொரு சிகரெட் கொளுத்திக் கொண்டு தொழில் கருத்தரங்கத்தைத் துவக்கினார்கள்!

"என்ன சொல்லு அலெக்ஸ்?" என்றான் கிரண்.

"முப்பது கோடி!" என்றான் அலெக்ஸ்.

ராவிற்கு புரையேறியது. "விளையாடறியா? நாம என்ன மினிஸ்டரா, அந்த அளவு பணம் பார்க்கறதுக்கு?"

"இத பாரு!" தன் பேண்ட் பாக்கெட்டில இருந்து ஒரு மடக்கப்பட்ட செய்தித்தாள் எடுத்து சுருக்கம்நீக்கி, "படிக்கிறேன் கேளுங்க" என்றான் அலெக்ஸ். படித்தான்.

"மண்டலதேவிக்கு முப்பது கோடியில் வைரக் கிரீடம்! ஆந்திர மாநிலத்தில் உள்ள மண்டலம் என்ற ஊரில் மிகவும் பிரபலமான தெய்வம் மண்டல தேவி! இந்தக் கோயிலுக்கு இந்தியா முழுக்கப் பக்தர்கள் உண்டு. எல்லா மொழி மக்களும் மண்டல தேவியை மிகவும் சக்தி வாய்ந்த கடவுளாகக் கருதி வணங்கி வருகிறார்கள். ஒரு நாளைக்கு மண்டல தேவியை தரிசிக்க சராசரியாக முப்பதாயிரம் பக் தர்கள் வந்து செல்கிறார்கள். பக்தர்கள் வழங்கும் காணிக் கையை இருபத்தி நாலு மணி நேரமும் அலுவலர்களை நியமித்து எண்ணுகிறது கோயில் நிர்வாகம்."

நடுவில் நிறுத்தி பீர் குடித்தான் அலெக்ஸ்.

"கோயில்ல பூந்து உண்டியல் லவட்டிடலாம்னு சொல் றியா?" என்றான் ராவ்.

"இரு. இன்னும் நியூஸ் முடியலை. இந்த மண்டல தேவிக்கு வருகிற இருபத்தி நான்காம் தேதி திருவிழா நடக்கிறது. அன்றைய தினம் மண்டலதேவிக்கு ஒரு புதிய வைர கிரீடம் அணிவிக்கப்படுகிறது. இந்த வைர கிரீடத்தின் மதிப்பு முப்பது கோடி ஆகும். இந்த வைரக் கிரீடம் கோயிலுக்கு செய்து கொடுக்கின்ற பொறுப்பு சென்னையைச் சேர்ந்த ஆனந்தி ஜூவல்லர்சுக்குத் தரப்பட்டது. விலை உயர்ந்த வைரங்களையும், நவ மணிகளையும் பதித்து ஆனந்தி ஜூவல்லர்ஸ் இந்த வைரக் கிரீடத்தை உருவாக்கியுள்ளார்கள். இன்னும் சில தினங்களில் இந்த வைரக் கிரீடம் மண்டல தேவி கோயிலுக்கு அனுப்பி வைக்கப்பட உள்ளது. பொது மக்கள் பார்க்க வேண்டும் என்பதற்காக இந்த வைரக் கிரீடம் தற்சமயம் ஆனந்தி ஜூவல்லர்சின் கடையில் வைக்கப்பட்டுள்ளது. 'இன்னும் மூன்று தினங்களுக்கு இந்தக் கிரீடம் பொது மக்களின் பார்வைக்கு வைக்கப் பட்டிருக்கும்' என்று நகைக் கடையின் உரிமையாளர் திரு.வேணுகோபால் தெரிவித்தார்."

படித்து முடித்து விட்டு செய்தித்தாளை டீப்பாய் மேல் போட்டான்அலெக்ஸ்!

"இந்த கிரீடத்தோட படம் போட்டிருக்கானா?" என்றான் கிரண்.

"இல்லை."

"இருபத்தி நாலாம் தேதியா திருவிழா?"

"ஆமாம். இன்னைக்குத் தேதி பதினைஞ்சு. இன்னும் ஒம்போது நாள் இருக்கு."

"எப்படியும் திருவிழாவுக்கு ரெண்டு நாள் முன்னாடியாவது கிரீடம் அங்கேப் போய்டும்."

"ஆமாம்."

"முப்பது கோடி ரூபாய் மதிப்புன்னா நிச்சயமா எக்கச்சக்கா பாதுகாப்பு ஏற்பாடுகள் இருக்கும்."

"அது இருக்கத்தான் செய்யும். மளிகை கடை வாசல்ல உப்பு மூட்டையைப் போட்டு வைச்சிற மாதிரி "வாப்பா, எடுத்துட்டுப் போ'ன்னு வாசல்ல போட்டு வைப்பாங்களா? ஒரு மாங்கா வேணும்னாலும் ஒண்ணு கல்லால அடிக்கணும், இல்லைன்னா மரத்து மேல ஏறணும். முயற்சி இல்லாம முப்பது கோடி சம்மாக் கிடைக்குமா?" என்றான் அலெக்ஸ்.

"ஹை! இது சுவர்ச்சிகரமான ப்ராஜெக்டாத் தெரியுது. இறங்கிடலாம் அலெக்ஸ், ஏதாச்சும் பிளான் பண்ணிட்டியா?" என்றான் ராவ்.



"அந்தக் கிரீடத்தை அடிச்சடணும்னு ஒரே பிளான்தான் தற்சமயம். முதல்ல அந்த வைரக் கீரிடம் எப்படி இருக்கு, அதை என்ன பாதுகாப்பு ஏற்பாடுகளோட வெச்சிருக்காங்கன்னு தெரிஞ்சுக்கலாம்."

"அதெப்படி தெரிஞ்சுக்கிறது?"

"நீயும், நானும் பொதுமக்கள். இல்லையா? கூட்டத் தோட கூட்டமாய் போய் முதல்லஒரு முதல் கட்ட சர்வே விடலாம் கிரண்."

"கரெக்ட். இப்ப கடை திறந்திருக்குமா?"

அலெக்ஸ் வாட்ச் பார்த்து, "திறந்திருக்கும். வாங்க, போய்ட்டு வந்துடலாம்" என்று எழுந்து கொண்டான்.




**கா**ரில் இசை கேட்டபடி பேங்க் உள்ளே சென்றிருக்கும் சசிலா திரும்புவதற்காகக் காத்திருந்தான் பரத்.

பஸ் ஸ்டாப்பில் நின்றிருந்த அந்த மஞ்சள் சூரிதாரிணியை எங்கோ பார்த்தது போல் ஒரு ஞாபக நிழல் அவனுக்குள் படிந்து விலகிக் கொண்டிருந்தது. அந்தப் பெண்ணும் நான்கு விநாடிக்கு ஒரு தரம் காருக்குள் இருக்கும் இவனைப் பார்ப்பது போலத் தெரிந்தது.

பெண்களைப் பார்க்கும் போது ஒரு தடவைக்கு இரண்டு தடவை நன்றாக முகத்தைப் பார்த்தால் மனதில் பதிந்திருக்கும். முகத்தை யார் சரியாகப் பார்க்கிறார்கள்?

இவள் ஒரு ஹோட்டல் ரிசப்ஷனிஸ்ட்டோ? அல்லது ஷாப்பிங் காம்ப்ளெக்ஸில் கம்ப்யூட்டரில் பில் போட்டுத் தந்தாளா? அல்லது சினிமா தியேட்டரில் எனக்கு முன் சீட்டில் அமர்ந்து படம் பார்த்தாளா?

எங்கேயோ பார்த்திருக்கிறேன். எங்கே?

பரத் யோசித்துக் கொண்டிருக்கும் போதே அந்தப் பெண் காரை நோக்கி வந்தாள். தன்னை நோக்கித்தான் வருகிறாள் என்பதை உணர முடிந்தது. அவள் வந்து சேர்வதற்குள் ஞாபகப்படுத்திக் கொண்டு விட வேண்டும் என்று மூளையில் அர்ஜெண்ட்டாய் கிளறியும்... ம்கூம்... நினைவுக்கு வரவில்லை.

அவள் காரைச் சுற்றிக் கொண்டு வந்து, குனிந்து... (இந்த சமயம் பரத்திற்கு சம்பந்தமில்லாமல் ஒரு புது நடிகையின் பத்திரிகை பேட்டி நினைவுக்கு வந்தது.

பேட்டியாவது: கதைக்கு அவசியமெனில் நான் கவர்ச்சி காட்டத் தயங்க மாட்டேன்)

"ஹலோ சார்" என்றாள் அவள்.

"ஹலோ" என்றான் முத்தாய்ப்பு 'ஹிஹி'யுடன்.

"உங்க ஃபிரண்டு நல்லா இருக்காரா?"

"எந்த ஃபிரண்டு?"

"அதான் அந்த அஞ்சி ரூபா ஃபிரண்டு."

"ஸாரி. எனக்குப் புரியற மாதிரி சொல்ல முடியுமா?"

"என்ன சார், என்னைத் தெரியலையா?"

"தெரியுது. அதான் குனிஞ்சு தெளிவாக் காட்டறிங்களே, முகத்தை. நல்லாத் தெரியுது. ஆனா யாருன்னுதான் அடையாளம் புரியலை."

"என்னைப் பார்த்த ஞாபகம் கூட வரலையா?"

"அது வருது, எங்கே, எப்போ, எப்படின்னுதான்..."

"உங்க விசிட்டிங் கார்டு கொடுங்க. அப்புறமா போன் செஞ்சி எங்கே, எப்படி சந்திச்சோம்னு சொல்றேன். எனக்கு பஸ் வந்துடுச்சு."

பரத் அவசரமாகத் தன் கார்டு எடுத்துக் கொடுத்து, "கண்டிப்பா போன் செய்யுங்க. நான் காத்துக்கிட்டிருப்பேன்" என்று பரத் சொன்ன போதுதான் சுசிலா கதவைத் திறந்து காரில் ஏறிக் கொண்டாள்.

அவள் தன் பஸ்ஸை நோக்கி ஒரு ஊஞ்சலாட்டத்துடன் ஓட....

"யார் பரத் அது? எதுக்கு கார்டு கொடுத்து போன் பண்ணச் சொன்னிங்க?" என்ற சுசிலா ஆழமான நீலத்தில் ஜீன்சும், அதே நிறத்தில் டி - ஷர்ட்டும் அணிந்திருந்தாள். இரட்டைக் குதிரை வால்கள் கழுத்து வரை அசைந்தன. 'Now Your Move' என்றன எம்பிராய்டரி எழுத்துக்கள்.

"சுசி, எப்பவும் நீ கடைசி வரியில் எண்ட்ரி கொடுத்துத் தப்பாப் புரிஞ்சுக்கிட்டு சந்தேகப்படறதேப் பொழைப்பாப் போச்சு."

"என்ன சந்தேகப்பட்டேன் இப்போ? அவ யாருன்னு தானே கேட்டேன்."

"அது எனக்கேத் தெரியலை சுசி."

"முன்னேப் பின்னே தெரியாதவளுக்கு எதுக்கு அட்ரஸ் தாறீங்க?"

"முன்னேப் பின்னே ஓரளவு தெரியுது சுசி. அடையாளம் தான் புரியலை. எங்கேயோ பார்த்திருக்கேன். எங்கேன்னு புரியலை. ஆனா அவ வந்து என்னைத் தெரியலையான்னு கேட்டுட்டுப் போறா. அட்ரஸ் கொடுங்க. அப்புறமா போன் செஞ்சி நான் யாருன்னு சொல்றேன்னா, அதான் தந்தேன்."

"அவளைப் பார்த்தா யோக்யமா எதுவும் தோணலையே."

"உனக்கு உன்னைத் தவிர வேற எந்தப் பொண்ணையும் யோக்யமாத் தெரியாது. பணம் கட்டிட்டியா? பேலன்ஸ் ரெண்டு ரூபா எங்கே?"

"அங்கே அனாதை ஆசிரமம் உண்டியல் வெச்சிருந்தது. அதில போட்டுட்டேன்."

பரத் உடனே சிரித்தபடி காரை ஸ்டார்ட் செய்தான்.

"எதுக்கு சிரிச்சிங்க?"

"கேக்காதே. திட்டுவே."

"பரவாயில்லை. சொல்லுங்க."

"என்கிட்டே வந்து குனிஞ்சு என்னைப் பார்த்துப் பேசிட்டுப்போன அந்தப் பெண்ணோட ஞாபகம் வந்துச்சி. சிரிச்சேன்."

"அவ ஞாபகம் இப்ப ஏன் வந்திச்சி?"

"நீ உண்டியல்ன்னு சொன்னதும் வந்திச்சி."

"யு... யு... ராட்டன் மைண்டட் ஃபெல்லோ!"

"பார்த்தியா, திட்டுவேன்னுதான் சொல்ல மாட்டேன்னு சொன்னேன். சரி, நம்ம ஸ்டாஃப் மாதவியை ஆஸ்பத்திரில பார்த்துட்டு வந்தியே, எப்படி இருக்கா?"

"சின்ன ஆக்ஸிடெண்ட்தான். தப்பிச்சுட்டா. கழுத்தில, கொஞ்சம் சதை பிய்ஞ்சி போய் அந்த இடத்தில பிளாஸ்டிக் சர்ஜரி பண்ணிருக்காங்க."

"செலவோட செலவா அவளை இன்னொரு பிளாஸ்டிக் சர்ஜரி கூட பண்ணிக்கச் சொன்னா தேவலை சுசி."

"என்ன சொல்றிங்க?"

"ஆபீசுக்கு வர்றவங்க அவளைப் பார்த்துட்டு நம்ம ஆபீசையே குறைச்சலா மதிப்பு போடறாங்க."

"எந்த வகையில?"

"ஒரு முனியாண்டி ஹோட்டல் வாசல்ல சர்வர் கொண்டாந்து சின்ன தவலை வெச்சு பூ போட்டான். அதோட முதலாளி வந்து 'வாசல்லபெரிய சைஸ்ல அண்டா வைடா. இப்படி சின்ன சைசுல வைக்கக் கூடாது. பெரிசா இருந்தாதான் நிறைவா உள்ளே சாப்பிட வருவாங்க'ன்னு சொன்னாராம். அந்த மாதிரி... இவளை வாசல்ல உக்கார வெச்சிருக்கிறது நியாயமா?"

"நீங்க எங்க வர்றிங்கன்னு புரியுது."

"புரிஞ்சு என்ன பிரயோஜனம்? நானும் பத்து வருஷமா சொல்லிட்டு இருக்கேன். ஆபீசை விரிவாக்கம் செய்யலாம்னு. ஒவ்வொரு ஆபீசைப் போய்ப் பாரு. கலகல

கலன்னு ஒரே வளையல் சத்தம்! எந்தப் பக்கம் திரும்பி னாலும் ஒரு பிளெஸண்ட் ஃபேஸ்! நம்ம ஆபீசல நமக் குன்னு வாய்ச்சது ஒரு தொத்தல் மாதவி! இந்த லட் சணத்தில இப்ப கருத்தடை ஆபரேஷன் வேற செஞ்சிக் கிட்டு வரப் போறா. சுசி, இந்த வருஷத்துக்குள்ளே ரெண்டு பேரையாவது புதுசா சேர்த்தாகணும்."

"வொய் நாட் பாய்ஸ்?"

"பொண்ணுங்கதான் ரொம்ப சின்சியர். காரணமில்லாம கொடி தூக்க மாட்டாங்க. வர்ற கஸ்டமர்சுக்கும் ஒரு ஆறுதலா இருக்கும். ஏற்கனவே அவங்க வினோதமான பிரச்சினைகளோட நம்ம ஆபீசுக்கு வர்றாங்க. இங்கேயும் வாழ்க்கை வெறுக்கற ஃபிகரைப் பார்த்து நொந்து போயிட றாங்க சுசி."

அதற்குள் கார் அலுவலகம் உள்ள கட்டிடத்தை அடைந்து நின்று விட, "பதில் சொல்லு சுசி" என்றான் இறங்கியவளைப் பார்த்து இறங்காமல்.

"யோசிக்கலாம், வாங்க."

"அப்பா! யோசிக்கலாம்னாவது சொன்னியே? வாழ்க! நீ வாழ்க! உன் பனியன் வாழ்க! அதில் வார்த்தைகள் வாழ்க! வார்த்தைகள் இடம் பெற காரணமாயிருக்கும்..."

"வர்றீங்களா,நான் போகட்டுமா?"

சுசிலா லிஃப்ட்டை நோக்கி நடக்கத் துவங்க ஓட்டமாய் வந்து அவளோடு சேர்ந்து கொண்டான் பரத்.

○

மூன்லைட் டிடெக்டிவ் ஏஜன்சி அலுவலகத்திற்குள் வந்த போது, ரவி பிளாஸ்க்கில் இருந்து ஒரு கப்பில் காப்பியை ஊற்றியபடி, "ஒரு கஸ்டமர் வந்திருக்கார் சார், உள்ளே உக்கார வெச்சிருக்கேன்" என்றான்.

இருவரும் உள்ளே வந்தார்கள்.

கால் மேல் காலாய் அமர்ந்திருந்த அவன் சுதந்திரமாக சிகரெட் பிடித்தபடி இருந்தான். ஹலோ சொன்ன போது புன்னகைக்கவில்லை. கை குலுக்கலில் கொஞ்சம் வியர்வை தெரிந்தது. மூன்றாவது தினமாக ஷேவ் செய்யவில்லை என்றும் தெரிந்தது.

"ஐ'ம் திவாகர்" என்றுவிட்டு, அடுத்த வாக்கியத்திற்கு இரண்டு முழு நிமிடங்கள் மௌனமாய் இருந்தது எரிச்சலாய் இருந்தது.

"உங்க பிரச்சினை என்ன மிஸ்டர் திவாகர்?" என்றான் பரத்.



[illegible] நீட்டினாள் சுசிலா.

"என் மனைவியை நான் சந்தேகப்படறேன். என் சந்தேகம் நிஜமான்னு நீங்கதான் துப்பறிஞ்சு சொல்லணும்."

"வெய்ட். கொஞ்சம் விபரமா வரலாம். நீங்க என்ன செய்றீங்க?"

"என் மனைவியை சந்தேகப்படறேன்."

"அதில்லை. என்ன தொழில் ஆர் உத்தியோகம்?"

"ஒரு கெமிக்கல் கம்பெனில சேல்ஸ் ரெப்ரெசன்டேடிவ்."

"மாசத்தில இருபது நாள் வீட்ல இருக்க மாட்டிங்களா?"

"ஆமாம்."

"உங்க வைஃப் பேர் என்ன?"

"ப்ரீதி."

"லவ் மேரேஜா?"

"இல்லை. அரேன்ஜ்ட் மேரேஜ்."

"உங்களுக்கு எப்போ கல்யாணமாச்சி?"

"ஒரு வருஷம்தான் ஆகுது."

"உங்க வீட்ல யார், யார்?"

"நானும், அவளும் மட்டும்தான்."

"அவங்க வேலைக்குப் போறாங்களா?"

"ஆமாம்! ஹோட்டல் தீன் பிரகாஷ்ல கம்ப்யூட்டர் ஆபரேட்டர்."

"ரைட்டு. இப்போ உங்களோட சந்தேகத்துக்கு வரலாம்" என்றாள் சுசிலா.

"இரு சுசிலா. அவர் மனைவி பத்தி இன்னும் சில விபரங்கள் விசாரிச்சிடறேன். ஏன் சார், அவங்க எதில வேலைக்குப் போறாங்க?"

"பஸ்சில"

"சேலையா, மாடர்ன் டிரெஸ்ஸா?"

"ரெண்டும் யூஸ் பண்ணுவா."

"ரைட்டு. உங்களுக்குச் சந்தேகம் எப்பயிலேர்ந்து?"

"நாலு மாசமா."

"எப்படி ஆரம்பிச்சது?"

"வெளியூர்லேர்ந்து அவ ஆபிசுக்கு போன் செஞ்சேன். வாலைன்னாங்க பக்கத்து வீட்டு நம்பர்ல கூப்பிட்டேன். வீடு பூட்டியிருக்குன்னாங்க. காலை ஒரு தடவை,

மத்தியானம் ஒரு தடவை, ஈவினிங் ஒரு தடவை, மூனு தடவையும் பூட்டியிருக்குன்னு சொன்னாங்க. மறுநாள் ஆபீஸ்ல அவளைப் பிடிச்சி கேட்டதுக்கு 'நேத்து ஆபிஸ்லதான் இருந்தேன். யாரோ சரியாப் பார்க்காம நான் வரலைன்னு சொல்லியிருக்காங்க'ன்னு சொன்னா, நல்ல சமாதானமா இருந்திச்சு, விட்டுட்டேன்."

"அப்புறம்?"

"ஊருக்கு வந்து வேற ஒரு வேலையா அவளோட ஆபிசுக்கு போயிருந்தேன். அப்ப அவ மேஜையில யதேச்சையாக அட்டெண்டன்ஸ் ரெஜிஸ்டர் கிடந்திச்சு, அவ டாய்லெட் போன சமயத்தில புரட்டிப் பார்த்தப்போ நான் போன் செஞ்ச தினம் அவ லீவுன்னு போட்டிருந்திச்சு. எனக்கு ஷாக்."

"உங்க மனைவியை விசாரிச்சிங்களா?"

"இல்லை. அவ பொய் சொன்னது பெரிய அதிர்ச்சி. அப்புறம் ஒரு தடவை அவளை யாரோ ஒருத்தனோட பைக்குல பார்த்ததா என் சொந்த சித்தப்பா என்கிட்ட சொன்னார். அதை விசாரிச்சேன். கம்ப்யூட்டர் சர்வீஸ் பண்ற கம்பெனிக்கு ஆபீஸ் கொலிக்கோட போயிருந்தேன்னு சொன்னா. என் சித்தப்பாவை அவளோட ஆபிசுக்கு கேஷுவலா போற மாதிரி அனுப்பி வெச்சு பைக்குல அவர் பார்த்த ஆள் அந்த ஆபிஸ்ல இருக்கானான்னு பார்க்கச் சொன்னேன். அந்த ஆள் அங்கே இல்லைன்னுட்டார்."

"அப்புறம்?"

"அவளைக் கட்டிப் பிடிச்சப்போ அவ கூந்தல்லேர்ந்து சிகரெட் வாசனை வந்தது. கேட்டதுக்கு பஸ்சுல ஒருத்தன் பின்னாடியே நின்னு ஊதிக்கிட்டிருந்தான்னு சொன்னா, இந்த மாதிரி அப்பப்ப சின்னச் சின்ன சமாதானங்கள் சொல்லிடுவா. எனக்கு ஒரே டென்ஷனா இருக்கு. சரியான ஆதாரம் இல்லாம என் சந்தேகத்தை ஊர்ஜிதம் செய்ய முடியாமத் தவிக்கிறேன்."

பரத் கொஞ்ச நேரம் யோசித்து விட்டு, "உங்க வைஃப் வேலை பார்க்கற ஹோட்டல் அட்ரஸ், போன் நம்பர் எல்லாம் எழுதிக் கொடுங்க. அவங்க போட்டோ எதுவும் கொண்டு வந்திருக்கிங்களா?" என்றான்.

திவாகர் எழுந்து நின்று தன் பேண்ட் பாக்கெட்டில் இருந்து எடுத்துத் தந்த புகைப்படத்தைப் பார்த்த மாத்திரத்தில் ப்ரீதியின் அழகும், கவர்ச்சியும் அவனைத் தாக்கின.






**மா**ம்பலம் பஸ் டெர்மினஸ் அருகில் மூன்று மாடிகள் கொண்ட புதிய கட்டிடத்தில் நியானில் ஆனந்தி ஜூவல்லரியின் பெயர் நிமிடத்திற்கொரு முறை நிறம் மாறிக் கொண்டிருந்தது.

ரேஷன் கடையில் போல மக்கள் வெள்ளம். கடைக்குள் ஒவ்வொரு மாடியிலும் திருவிழா. நூற்றைம்பது பேர் யூனிஃபார்ம் அணிந்த ஊழியர்கள் மட்டும்.

மூன்றாவது மாடியில் ஒரு தனியறையில் அந்த வைரக் கிரீடம் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தது. பத்து இன்ச் அகலத்தில் பதினெட்டு இன்ச் உயரத்தில் மிக அலங்காரமாக பெரிய பெரிய வைரங்களையும், நவரத்தினக் கற்களையும் பதித்துக் கொண்டிருந்த அந்த வைர கிரீடம் மின்னல்களை உற்பத்தி செய்து கொண்டிருந்தது. இரண்டு ஃபோகஸ் விளக்குகள் போடப்பட்டிருந்தன.

ஒரு தனி மேஜை மேல் திக்கான கண்ணாடிப் பெட்டிக்குள் அந்த கிரீடம் இருந்தது. கண்ணாடிப் பெட்டியின் சின்ன ஒற்றைக் கதவுக்கு ஒரு பூட்டு இருந்தது. பூட்டப்பட்டிருந்தது.

மேஜைக்கு இந்தப் பக்கம் இரும்புச் சங்கிலித் தடுப்பு போடப்பட்டிருந்தது. சங்கிலித் தடுப்பிற்கும் கிரீடப் பெட்டிக்கும் நடுவில் எட்டடி இடைவெளியிருந்தது. கண்ணாடிப் பெட்டிக்கு இரண்டு பக்கத்திலும் இரண்டு போலீஸ்காரர்கள் நீளத் துப்பாக்கியைத் தோளில் மாட்டி நின்றிருந்தார்கள்.

அந்த அறைக்குள் பத்துப் பத்துப் பேராகத்தான் அனுமதிக்கப்பட்டார்கள். சங்கிலித் தடுப்பு வரை வருகின்ற அவர்கள் அங்கே நின்று கிரீடத்தைப் பார்க்கலாம். அதிகபட்சம் பதினைந்து விநாடிகள்.

திருப்பதி கோவிலில் ஏழுமலையான் தரிசனம் மாதிரி!

சங்கிலித் தடுப்புக்கு வெளியே நிற்கும் சப்-இன்ஸ்பெக்டர் ஒருவர், "பார்த்தாச்சு இல்லை, புறப்படுங்க. சீக்கிரம்! மத்தவங்களும் பார்க்கணுமில்லை, நகருங்க!" என்று விரட்டிக் கொண்டிருந்தார்.

அந்த ஜூவல்லரியின் முதல் மாடியில் ஒரு பிரதான அலுவலக அறை இருந்தது. அங்கேதான் முதலாளி வேணுகோபால் உட்கார்ந்து பீடா மென்று கொண்டிருந்தார்.

வேஷ்டி, சில்க் ஜிப்பா அணிந்திருந்த அவருடைய நெற்றியில் வட்டமாகக் குங்குமம் வைத்திருந்தார்.

இண்டர்காம் ஒலித்ததும், எடுத்துப் பேசினார். "ஆமாம். வரச் சொல்லியிருந்தேன். அனுப்பி வை" என்றார்.

சில விநாடிகளில் கதவில் தட்டி விட்டு அந்த இளைஞன் உள்ளே வந்து புன்னகைத்து, "வணக்கம் சார்" என்றான்.

"நீங்கதானே குமாரசாமி?" என்றார் வேணுகோபால்.

"ஆமாம் சார்" என்ற அவன் தன் சட்டை பாக்கெட்டில் இருந்து தனது பத்திரிகை வழங்கியிருந்த அடையாள அட்டையை எடுத்து அவரிடம் காட்டி விட்டு மறுபடி தன் பைக்குள் வைத்துக் கொண்டு அமர்ந்தான்.

"ஏதாச்சும் சாப்பிடறிங்களா?"

"இல்லை, வேணாம் சார். பேட்டியை ஆரம்பிக்கலாமா சார்?"

"ஒரு நிமிஷம், வாயைக் கொப்பளிச்சுட்டு வந்துடறேன்" என்று மின்விசிறி பக்கமாக முகம் வைத்து பேசி விட்டு எழுந்து அருகில் இருந்த பாத்ரூம் உள்ளே சென்று விட்டு பூத்துண்டால் வாயை துடைத்தபடி வந்து அமர்ந்தார். "ம். கேளுங்க."

"இந்த மண்டலதேவி வைரக் கிரீடம் ஆர்டர் உங்களுக்கு எப்படிக் கிடைத்தது?"

"இது தெய்வத்தோட அனுக்கிரகம்னுதான் சொல்லணும். கோயில் நிர்வாகம் இந்தியா முழுக்க மொத்தம் எழுபத்தியேழு பேர்கிட்டே கொட்டேஷன் கேட்டிருந்தாங்க. நான் எப்பவுமே சாமி சம்பந்தப்பட்ட நகைகள் செய்யற ஆர்டர் வந்தா அதிக லாபம் வைக்க மாட்டேன். தங்கம் விலையோட, உண்மையான கூலி எவ்வளவோ அவ்வளவு வாங்கிக்குவேன். சாமி நகைங்க செய்றப்போ கிடைக்கிற புண்ணியத்தை விட லாபமா முக்கியம்? அந்த மாதிரி இந்த வைரக் கிரீடத்துக்கும் அவங்க சொன்ன டிசைனுக்கு நியாயமா தங்கம், வைரம் மற்ற நவமணிகள் இதெல்லாத்தோட சரியான அடக்க விலை கணக்கு போட்டு கொட்டேஷன் கொடுத்தேன். எனக்கு ஆர்டர் கிடைச்சது."

"இந்த வைரக் கிரீடத்தைச் செய்ய உங்களுக்கு எத்தனை நாளாச்சு?"

"ஒரு மாசம் ஆச்சி."

"எத்தனை பேர் செஞ்சாங்க?"

"ரெண்டே பேர். மாணிக்கம் ஆசாரின்னு நம்ம கடையில ரொம்ப நாளா இருக்கார். அவரும் அவர் பையனும் என்



னோட வீட்ல வெச்சி இதை செஞ்சாங்க. இந்த ஒரு மாசமும் அவங்க என் வீட்லயே தங்கி, அங்கேயே சாப்பிட்டு, செஞ்சிக் கொடுத்தாங்க."

"இந்த வைரக் கிரீடத்தோட மதிப்பு என்ன?"

"முப்பது கோடியே எட்டு லட்சம் ஆகுது."

"இன்னும் எத்தனை நாளைக்கு இதைப் பொதுமக்களோட பார்வைக்கு வைக்கிறிங்க?"

"நாளைக்கும், நாளன்னைக்கும் பார்க்கலாம்."

"திருவிழா இருபத்தி நாலாம் தேதி தானே? நாளைக்கு பதினேழு. நாளன்னைக்கு பதினெட்டு. அதுக்கப்புறமும் நாள் இருக்கே. ஏன் கேக்கறேன்னா எல்லா ஏரியாவுலயும் மக்கள் இந்த கிரீடத்தைப் பத்திப் பேசிக்கிறாங்க. பார்த்தவங்க நீயும் அவசியம் போய்ப்பாருன்னு சொல்றாங்க. இன்னும் ரெண்டு மூணு நாள் அதிகமா பொது மக்கள் பார்வைக்கு வெச்சா நிறைய பேர் பார்ப்பாங்க. அதனாலே கேட்டேன்."

"இன்னும் ஒரு நாள் வேணும்னா அதிகப்படியா அனுமதிக்கலாம். ஏன்னா இருபதாம் தேதி நான் கிரீடத்தை அனுப்பி வெச்சாகணும்."

"அப்படியா?" என்ற குமாரசாமி மேற்கொண்டு வேணுகோபால் எப்பொழுது எப்படி இந்தத் தொழிலுக்கு வந்தார் என்று பர்சனல் விபரங்களைக் கேட்கத் துவங்கினான்.




ஹோட்டல் அறையில், கிரண், ராவ், அலெக்ஸ் கூடியிருந்தார்கள்.

கிரண் மடியில் இரண்டு தலையணைகள், ராவ் விரலில் சுடப் போகிற சிகரெட். அலெக்ஸ் ஆடும் நாற்காலியில் ஆடிக் கொண்டிருந்தான்.

"நேத்து ராத்திரி தூக்கமே வரலை. கண்ணு முன்னாடி அந்தக் கிரீடம் வந்து நிக்கிது. வாவ்! பியூட்டிஃபுல் பீஸ்" என்றான் ராவ்.

"பாம்பேல கொண்டு போய் வைரம் தனியா பிரிச்செடுத்து, தங்கத்தை உருக்கி வித்துடலாம். அதுக்கெல்லாம் நம்மகிட்ட ஆளுங்க இருக்காங்க. முப்பது கோடி! லைஃப் டைம் ப்ராஜெக்ட்!" என்றான் கிரண்.

"நம்ம கைக்கு வந்தப்புறம்தானே பிரிக்கிறதும், உருக்குறதும்." என்ற அலெக்ஸ் ஒரு காகிதச் சுருளை டீப்பாய்

மேல் விரித்தான். "இதான் அந்த பில்டிங்கோட படம். இதில மூணாவது மாடில ஒரு ஜன்னல் பக்கத்தில அம்புக்குறி போட்டிருக்கேன் பாருங்க. அதுதான் இப்போ அந்த கிரீடம் வைக்கப்பட்டிருக்கிற ரூம்" என்றான்.

"பகல்ல கிரீடம் பொதுமக்களோட பார்வைக்கு இருக்கிற சமயத்தில நம்மால செயல்பட முடியாது. கடை வாசல்ல இரண்டு போலீஸ்காரங்க. மூணாவது மாடில அந்த ரூமோட வாசல்ல ரெண்டு போலீஸ். உள்ளே கண்ணாடி பெட்டிக்குப் பக்கத்தில ரெண்டு போலீஸ், தவிர ஒரு இன்ஸ்பெக்டர் வேற!" என்றான் கிரண்.

"அந்த ரூமில டாப்ல கேமிரா ஃபிக்ஸ் பண்ணியிருந்தாங்க கவனிச்சியா? அந்த ரூமுக்குள்ளே வந்து போன அத்தனைப் பேரையும் பதிவு செஞ்சிட்டிருந்தாங்க. நாமெல்லாம் கூட பதிவாகியிருப்போம்." என்ற ராவ், "அலெக்ஸ், நைட்லயும் அந்த கிரீடம் அதே ரூம்ல தான் வைக்கப்பட்டிருக்கா?" என்றான்.

"ஆமாம்."

"உனக்கெப்படி தெரியும்?"

"தெரியும். ஆள் பிடிச்சிருக்கேன்."

"நேத்து ராத்திரி ஒரு நோட்டம் விடப் போறதாகச் சொன்னியே, போய்ப் பார்த்தியா?"

"கடைக்குள்ளே நாலு போலீஸ்காரங்க, கடைக்கு வெளில நாலு போலீஸ்காரங்க, இந்த ஜன்னலுக்கு யாருக்கும் தெரியாம போக முடிஞ்சா அந்த கிரீடத்தைத் தொட்டுடலாம்."

"அது நடக்கிற காரியம் இல்லை. இந்தக் கட்டிடத்துக்கு இந்தப் பக்கம் ஒரே மாடியோட நின்னு போன கட்டிடம் இருக்கு. கட்டிடம் உச்சில ஸோடியம் வேபர் லைட்டு போட்டு வெச்சிருக்காங்க. அதனால யார் கண்லயும் படாம இந்த ஜன்னலை அடையறதுன்னா ஒரே ஒரு வழிதான் இருக்கு" என்றான் கிரண்.

"என்ன அது?"

"நாம பல்லியா மாறினாதான் உண்டு."

அந்த நகைச்சுவையை அலெக்ஸ் ரசிக்காமல் தன் நகத்தைக் கடித்துத் துப்பியபடி யோசனையில் ஆழ்ந்தான்.

போன் ஒலித்தது. ராவ் எடுத்துப் பேசி, "அலெக்ஸ், உனக்கு" என்று நீட்டினான்.

"ஹலோ" என்றான் அலெக்ஸ்.

"சார், நான் தேவதாஸ் பேசறேன்."

"சொல்லு."



"நீங்க சொன்ன மாதிரி போலி அடையாள அட்டை தயாரிச்சிட்டு பத்திரிகை நிருபர் மாதிரி அப்பாயின்ட்மெண்ட் வாங்கிட்டு அந்த நகைக் கடை முதலாளியைப் பேட்டி எடுத்தேன். என்ன ஒரு சிவப்பு தெரியுமா அந்தாளு?"

"அதைத் தெரிஞ்சுக்கத்தான் உன்னை அனுப்பிச்சேனா?"

"சார், பத்தொம்பதாம் தேதி வரைக்கும் கிரீடம் பொது மக்கள் பார்வைக்கு வைக்கப்படுது. இருபதாம் தேதி கோயிலுக்கு அனுப்பி வைக்கிறாங்க."

"எப்படி அனுப்பறாங்க?"

"அது தெரிஞ்சுக்க முடியலை. சில விஷயங்களை நேரடியா கேட்டா சந்தேகம் வந்துடும். அப்புறம்... அந்த ரூம்ல அவர் மட்டும் தான் இருக்கார். கிரவுண்ட் ஃப்ளோர்ல அவர் பையன் தாமோதரன் உக்காந்திருக்கார். முதல்ல அவரைப் பார்த்து, அவர் இண்டர்காம் மூலமாக பேசி பர்மிஷன் வாங்கினப்புறம்தான் அனுப்பி வைக்கிறார்."

"சரி, நீ வச்சிடு. மறுபடி உனக்கு நானே அப்புறமா போன் செய்யறேன்"

அலெக்ஸ் போனை வைத்து விட்டு, "கட்டிடத்தில முதல் மாடியில வெள்ளி அயிட்டங்கள் இருக்கு. கவனிச்சிங்களா?" என்றான்.

"ஆமாம்."

"அந்தப் பகுதியில அவ்வளவு கூட்டம் இருக்கறதில்லை."

"என்ன உன் ஐடியா?"

"நேரடித் தாக்குதல்!"

"தெளிவாய்ச் சொல்லு."

"போலீசை ஏமாத்தி கிரீடத்தைத் திருட முடியாதுங்கற சூழ்நிலை இப்போ. அதனால அவங்க கண்ணு முன்னாடியே முரட்டுத்தனமா கொள்ளையடிச்சிடலாமா?"

"சிக்கலாயிடும்பா"

"தெளிவாய்ப் பேசிப் பார்க்கலாம். கடை வாசல்ல வாடகைக்கு எடுத்த நம்பர் பிளேட் மாத்தின ஒரு வேன்ல ரெண்டு பேர் வெய்ட் பண்ண வேண்டியது. ஒரு ஆள் மாறுவேஷத்தில வெள்ளி வாங்கப் போற மாதிரி போய் சட்டுன்னு வேணுகோபால் ரூமுக்குள்ளே புகுந்து அவரோட நெத்தில துப்பாக்கி வெச்சிட வேண்டியது. அந்த மிரட்டல் முனையிலேயே அவரை மாடிக்கு அழைச்சிட்டுப் போய் போலீஸ் முன்னிலையிலேயே கிரீடத்தை எடுத்து ஒரு பைல போட்டுத் தோள்ல மாட்டிக்

கிட்டு, வேணுகோபாலையும் கூட்டிட்டுப் புறப்படறது வண்டி மாத்தி தப்பிச்சு ஒரு ஸ்டேஜ்ல அவரை மயக்கப் படுத்தி இறக்கி வெச்சிட்டுப் போயிட வேண்டியது."

"ரொம்ப ரிஸ்க் இருக்குது அலெக்ஸ்." என்றான் கிரண்.

"ரிஸ்க் இல்லாம முப்பது கோடி அடிக்கறது நடக்காது. இந்த பிளான்ல எங்கே பலவீனமா இருக்குன்னு யோசிப்போம். அதை சரி செய்வோம்."

"டைரக்டா செஞ்சிட்டா அடிச்சுடலாம்னுதான் தோணுது. முதல்ல துப்பாக்கியை நெத்தில வெச்சிடலாம். அப்படியே பூரா வேலையும் செஞ்சி முடிக்க முடியாது. ஒரு அசந்த சந்தர்ப்பத்தில, துப்பாக்கியை அவரோ, ஒரு புத்திசாலி போலீசோ தட்டி விட்டுட்டா ஆட்டம் குளோஸ். அதனால துப்பாக்கி முனையில முதல் காரியமா அவர் இடுப்புல பவர்ஃபுல் பாம் உள்ள பெல்டைக் கட்டி விட்டுட்டு கைல ரிமோட் பீஸ் எடுத்துக்கலாம். அழுத்தினா பீஸ் பீஸா வெடிச்சி சிதறிடுவார்னு மிரட்டலாம். யாராச்சும் ஒரு ஸ்டெப் எடுத்து வெச்சாலும் ரிமோட்டை அழுத்திடுவேன்னு சொல்லலாம். ரொம்ப எஃபெக்டிவா இருக்கும்" என்றான் ராவ்.

"கரெக்ட். மாறுவேஷம் ரொம்ப பர்ஃபெக்ட்டா இருக்கணும். மூணு பேருக்கும். உள்ளேப் போய் நடத்தப் போறது யாரு?"

"ஒருத்தர் பத்தாது அலெக்ஸ். நீயும், ராவும் உள்ளேப் போங்க. நான் வெளில கார்ல வெய்ட் பண்றேன்" என்றான் கிரண்.

மேற்கொண்டு திட்டத்தின் சின்னச் சின்ன விபரங்களையும் அவர்கள் பேசத் துவங்கினார்கள்.




"**ஹ**லோ, பரத் ஸ்பீக்கிங்" என்றான் போனை எடுத்து பரத்.

"என்ன சார் ஞாபகம் வந்துடுச்சா?" என்றது பெண் குரல். புரிந்தது. உண்டியல் என்றதும் நினைவில் வந்த, புதிராகப் பேசிவிட்டுப் போன அந்தச் சூரிதார் பெண்தான் பேசுகிறாள்.

பரத் எதிரே பார்த்தான். சுசிலா மும்முரமாக கம்ப்யூட்டரில் ஒரு கேம்ஸ் விளையாடிக் கொண்டிருந்தாள். கறுப்பு பணியனில் வெள்ளை எழுத்துக்களில் 'Valuable Zeros' என்று இருந்தன.



"இல்லைங்க. உங்களைப் பார்த்ததும் எனக்கு வேற ஒரு விஷயம்தான் ஞாபகம் வந்துச்சே ஒழிய, நீங்க யார்னு இன்னும் ஞாபகம் வரலைங்க."

"சும்மா பொய் சொல்றீங்க சார் நீங்க. அதெப்படி மறப்பீங்க?"

"மறக்க முடியாத அளவுக்கு நாம பார்த்து, பேசி, பழகியிருந்தா, அது இந்த ஜென்மத்தில நடந்திருக்க வாய்ப்பில்லைங்க."

"நாம பேசினதில்லை பரத். பழகினதில்லை பரத். ஆனா நான் உங்களைப் பார்த்திருக்கேன். நீங்க என்னைப் பார்த்திருக்கீங்க. உங்க ஃப்ரெண்டும் கூட இருந்தார்."

"அவன் பேர் என்ன?"

"அவரை எனக்குத் தெரியாதே."

"என்னை மட்டும் எப்படித் தெரியும்?"

"நீங்க பாபுலர் ஃபிகராச்சே"

"நீங்க கூட நல்ல ஃபிகருங்க. ஸாரி, தப்பா சொல்லியிருந்தா."

"சே! இதில என்ன தப்பிருக்கு?"

"சரி, உங்க பேரையாவது சொல்லுங்க. நினைவு வருதான்னு பார்க்கறேன்."

"வயோலா!"

"என்ன லா?"

"வயோலா"

"ஸாரிங்க. இப்பகூட எனக்குள்ள மணியடிக்கலை."

எதிர்முனையில் ஒரு சிரிப்பலை பரவி வடிந்தது.

"எங்களுக்குள்ளே மணியடிக்கிறதுன்னா வேற அர்த்தத்தில பேசிப்போம்."

"டேன்ஜரஸா இருப்பிங்க போலிருக்கே. உங்களுக்குள்ளேன்னா?"

"என் ஃப்ரெண்ட்ஸை சொன்னேன்."

"நீங்க எந்த காலேஜ் வயோலா?"

"கிண்டல் பண்ணாதிங்க சார். நான் எங்கே இருக்கேன், என்ன செய்யறேன்னு எல்லாம் உங்களுக்குத் தெரியும்."

"இதென்னங்க வம்பாப் போச்சு. எனக்கோ ஒரு துளியின் அளவுக்கு கூட ஞாபகம் வரலைன்னு சொல்றேன். நீங்க மேல மேல பேசிக்கிட்டேப் போறிங்களே..."

"ஒரு வேளை மறுபடி நேர்ல பார்த்தா ஞாபகம் வருமா?"

"நேத்து நேர்லதானே பார்த்தோம். ஞாபகம் வரலையே."

"நாம சந்திச்சப்போ நான் என்ன ட்ரெஸ் போட்டிருந்தேனோ, அந்த டிரெஸ்ல பார்த்தா ஞாபகம் வரலாமில்லையா?"

"சினிமால குடும்பம் பிரிஞ்சதும் பின்னாடி ஒரு சந்தர்ப் பத்தில குடும்பத்துக்கு மட்டும் தெரிஞ்ச ஒரு பாட்டைப் பாடி தேடுவாங்களே, அந்த மாதிரி சொல்றிங்களா?"

"ஆமாம்."

"ஆனா வயோலா, நீங்க யாருன்னு எனக்கு ஞாபகம் வரலைன்னா கூட, இன்னொரு தடவை நேர்ல சந்திக்க லாம்னு படுது."

"எப்போ சந்திக்கலாம் சார்?"

"நீங்கதான் சொல்லணும். எங்கே இருக்கிங்க நீங்க?"

"ஒரு பொண்ணோட அட்ரசை விசாரிக்கிறது நாகரீ கமா?"

"இல்லைதான். வேறெப்படி சந்திக்கிறது? ரொம்ப படுத்தறிங்க நீங்க."

"நான் எப்போ படுத்தேன்?"

"அய்யோ! படுத்திங்கன்னு சொல்லலை. படுத்தறிங் கன்னு சொன்னேன்."

"ஈவினிங் ஆறு மணிக்கு மெரினா பீச் வர்றிங்களா? உங்க கார் எனக்குத் தெரியும். நான் வந்துப் பேசறேன்."

"சரிங்க. அப்போ நாம சந்திச்சப்ப நீங்க போட்ருந்த ட்ரெஸ்ஸைப் போட்டுக்கிட்டு வரப்போறிங்களா?"

"ச்சீ! யு நாட்டி!"

"வெக்கப்படற மாதிரி இப்ப நான் என்னங்க சொல்லிட் டேன்?"

"அந்த ட்ரெஸ்ஸை எப்படிங்க பொது இடத்தில போட்டுட்டு வர முடியும்?" என்றுக் கேட்ட கையோடு எதிர்முனையில் அவள் வைத்து விட, பரத்திற்கு மண்டையைப் பிராண்டிக் கொள்ளலாம் போல இருந்தது.

இந்த வயோலாவின் மண்டையில் ஏதோ ஒரு ஓரமாக சின்ன விரிசல் இருக்கலாம். செமர்த்தியாகக் குழப்புகிறாள். ஆனால்... வசீகரமான குழப்பம்.

நாளைக்குக் குளிக்கும்போது கொஞ்சம் மெனக் கெட்டுத் தேடிப் பார்க்க வேண்டும். என் உடம்பில் புதிதாக எங்காவது ஒரு மச்சம் தோன்றியிருக்கிறதா என்ன? பெண்கள் தேடிப் பிடித்து ஜொள் வடிக்கத் துவங்கி விட்டார்களே..."

கம்ப்யூட்டரை அணைத்து விட்டு எழுந்த சுசிலா "போலாமா?" என்றாள்.

"எங்கே?" என்றான் பரத்.

"பத்தரை மணிக்கு அந்த ப்ரீதியோட ஆபீசுக்குப் போக லாம்னு சொன்னிங்களே."



"எந்த ப்ரீதி?"

"திவாகரோட சந்தேகத்துக்குரிய பொண்டாட்டி! என்னாச்சு உங்களுக்கு பரத்? திடீர்னு ஞாபக மறதி அதிகமாயிடுச்சா?"

"அப்படித்தான் போலிருக்கு சுசி! பொது இடத்தில போட்டுக்கிட்டு வர முடியாத டிரெஸ்சில ஒரு பொண் ணை பார்த்துட்டு நான் சுத்தமா மறந்து போறதுக்கு சான்ஸ் உண்டா?"

"அடுத்த ஜென்மம் வரைக்கும் ஞாபகம் வெச்சிருப் பிங்களே, அந்த மாதிரி விஷயங்களை."

"பின்னே வயோலா ஏன் புதிர் போடறா?"

"எந்த வயோலா?"

"நேத்து நீ உண்டியல்னதும் சிரிச்சு காரணம் விளக் கினேனே, அவதான், இப்போப் பேசினா. அவ பேர்தான் வயோலாவாம். அவளை நான் பார்த்திருக்கேனாம். பொது இடத்தில போட்டுட்டு வர முடியாத டிரெஸ்ல அவளைப் பார்த்திருக்கேனாம்."

"பரத்!"

"அதுவும் தனியா இல்லை. என் ஃப்ரெண்டோட சந்திச் சேனாம். வாட் நான்சென்ஸ்?"

"நான் சொல்றேன். ஏதாச்சும் ஸ்டார் ஹோட்டலுக்கு உங்க ஃப்ரெண்டோட போய் நீச்சல் குளம் பக்கத்திலே டேபிள்ல உக்கார்ந்து டிபன் சாப்பிட்டிருப்பீங்க. அப்போ நீச்சலடிச்சிட்டு வந்த இந்தப் பொண்ணை உங்க ஃப்ரண்டு அறிமுகப் படுத்தி வெச்சிருக்கலாம். நீச்சல் ட்ரெஸ்ல பொது இடத்துக்கு வர முடியாதே!"

"ரொம்ப லாஜிக்கலாதான் யோசிச்சு சொல்றே. ஆனா சுசி, இன்னொரு லாஜிக் இடிக்குதே"

"என்ன?"

"நீச்சல் உடையில நனைய நனைய பார்த்திருந்தா ஏழேழு ஜென்மத்துக்கும் மறக்க முடியுமா?"

"அவ சும்மா உங்ககிட்டே ஏதாச்சும் கலாட்டா பண்ணிப் பேசணும்னு பேசியிருப்பா. விடுங்க பரத்! அவ யாரா இருந்தா என்ன? இனிமே அவ பேசினா போனை என்கிட்ட கொடுங்க. இப்ப தொழிலை கவனிக்கலாம். ப்ரீதி நல்லவளா இல்லை அவ புருஷன் சந்தேகப்படற மாதிரி அவளுக்கு வேற யாரோடயாவது தொடர்பு இருக்கான்னு எப்படித் தெரிஞ்சுக்கப் போறோம்?" என்றாள் சுசிலா.

"முதல்ல அவளோட ஆபீஸ் போலாம். பியூனை விலைக்கு வாங்க முடியுமான்னு பார்க்கலாம்."

பரத்தும், சுசிலாவும் காரில் புறப்பட்டார்கள்.




**ஹோ**ட்டல் தின்பிரகாஷ் ஒற்றை நட்சத்திர அந்தஸ்துடன் இருந்தது. கட்டிடத்திற்கு வர்ணம் பூசி பல வருடமாகி நிறங்கள் மழுங்கிப் போயிருந்தன.

ஹோட்டலின் ரிசப்ஷனையொட்டி சின்ன ஆபீஸ் அறை இருந்தது. ஆறு பேர் வேலை பார்த்துக் கொண்டிருந்தார்கள். கம்ப்யூட்டருக்கு தனியறை இருந்தது. அதனுள்ளே கம்ப்யூட்டர் இருந்தது. ஆனால் நாற்காலி காலியாக இருப்பது கண்ணாடி வழியாகத் தெரிந்தது.

சுசிலாவை ரிசப்ஷனில் உட்காரச் சொல்லி விட்டு பரத் மட்டும் உள்ளே வந்து ஒரு நடுத்தர வயது கிளார்க் முன்பாக காலியாக இருந்த நாற்காலியில் அமர்ந்து கொண்டான்.

"குட் மார்னிங் சார். ஐ ம் குருநாதன், கமிங் ஃப்ரம் குரு கம்ப்யூட்டர் சர்விஸிங் கம்பெனி. எங்க கம்பெனியோட சர்விஸ் காண்ட்ராக்ட் போட்டா உங்களுக்கு நிறைய லாபம் உண்டு." என்று மூச்சு விடாமல் பேச.. அவர் கையமர்த்தி நிறுத்தினார்.

"கம்ப்யூட்டர் பத்தி நான் எதுவும் பேச முடியாது. எங்க கம்ப்யூட்டர் ஆபரேட்டர்கிட்டேப் பேசுங்க" என்றார்.

"அவங்க எங்கே இருக்காங்க சார்?"

"அவங்க ஆபிஸ் வந்துட்டு பர்மிஷன் போட்டுட்டு வெளிய போயிருக்காங்க."

"பரவால்லை. நான் வெயிட் பண்ணிப் பார்த்துட்டுப் போறேன்."

"அவங்க எப்ப வருவாங்கன்னு சொல்ல முடியாது. நீங்க போன் செஞ்சிட்டு அப்புறமா வந்து பாருங்க. அவங்க பேர் ப்ரீதி." என்றார்.

எழுந்து கொண்ட பரத் அவர் மேஜைமேல்ஒரு லெட்ஜரை வைத்து விட்டு விலகின பியூனிடம், "எக்ஸ்க்யூஸ் மி" என்று அருகில் வந்து. "ஒரு நிமிஷம் அப்படித் தனியா வர முடியுமா?" என்றான்.

தனியாக வந்ததும் "என்னா சார்?" என்றான் பியூன்.

"ஒன்னுமில்லைப்பா. நம்ம கம்பெனியோட கம்ப்யூட்டருக்கு சர்விஸ் காண்ட்ராக்ட் கேட்டு வந்தேன். அதுக்கு ப்ரீதிங்கிறவங்களைப் பார்க்கணுமாம். அவங்க இப்ப இல்லையாம். இந்தா, இதை சும்மா செலவுக்கு வெச்சிக்கோ" என்று ஐம்பது ரூபாய் நோட்டொன்று கையில் திணித்தான்.



"எதுக்கு சார் பணம் எல்லாம் தர்றே?"

"தப்பா நினைக்காதிங்க. எனக்கு அந்த ப்ரீதி எப்படி இருப்பாங்கன்னேத் தெரியாது. உங்களுக்கு அவங்களைப் பத்தி நல்லாத் தெரிஞ்சிருக்கும். அவங்க எப்படிப்பட்டவங்க, என்ன பிடிக்குமனு கொஞ்சம் விபரம் சொன்னா, அதுக்குத் தகுந்த மாதிரி அட்ஜஸ்ட் பண்ணிக்கிட்டு நடந்து ஆர்டர் வாங்கிடுவேன். அதான்..."

பியூன் இந்தப் பக்கம் அந்தப் பக்கம் பார்த்து விட்டு பணத்தைப் பாக்கெட்டில் செருகிக் கொண்டு, குரலைத் தணித்து. "அது அலையற கேசு சார்! ஆளைப் பார்த்தா வாட்டசாட்டமா இருக்கே! ஒரு ட்ரிபிள் எக்ஸ் ரம் வாங்கிக் கொடு சார்! அதுவே உன்னை வெளில இழுத்துட்டுப் போயிடும். சுகத்துக்கு சுகம், ஆர்டரும் கிடைச்சிடும்" என்றான்.

"அய்யோ! என்னப்பா இப்படிச் சொல்றே?"

"ஆமா சார்! நடக்கறதைச் சொன்னேன். பணம் வாங்கி பாக்கெட்ல வெச்சிட்டு பொய் சொல்லக் கூடாது பாரு! அது ஒரு மாதிரியான கேசு சார். உடம்பு திமிரு எடுத்து அலையுது. புருஷன் ரெப்ரசன்டேடிவ், வீட்லயேத் தங்கறதில்லை போலிருக்கு. இது கிடந்து ஆடுது."

"ஒரு கல்யாணமான பொண்ணு மேல அபாண்டமா பழி போடக்கூடாதுப்பா."

"யாரு? நான் பழி போடறேனா? அந்த பஜாரி இப்போ பர்மிஷன் போட்டுட்டு எங்கேப் போயிருக்கா தெரியுமா?"

"எங்கே?"

"இவளுக்கு இப்ப ஒரு வகையான பார்ட்டி கிடைச்சிருக்கான். அவனோடதான் சுத்தறா. கொஞ்சம் முன்னாடி அந்த பார்ட்டி போன் செஞ்சான். இவ போன்ல பாத்டேக்கு தங்க நெக்லஸ் கேட்டா. உடனே பர்மிஷன் போட்டுட்டு புறப்பட்டு வா, வாங்கித் தர்றேன்னு சொன்னான். ஆனந்தி ஜூவல்லரியான்னு கேட்டுட்டு இவ புறப்பட்டுப் போயிருக்கா. நேராப்போயி பாரு! அந்த பார்ட்டியோட அங்கே நகை வாங்கிட்டிருப்பா. இது குடும்பப் பொண்ணு செய்யற வேலையா? பாவம் அந்த புருஷன்! இவளை ரொம்ப நம்பிட்டிருக்கான் அந்த சோணகிரி!"

"சரிப்பா. அவங்க எப்படி இருந்தா நமக்கென்ன? அப்புறமா போன் செஞ்சி டைம் கேட்டுட்டு நான் ரமமோட வந்து அவங்களைப் பார்த்துப் பேசறேன். ரொம்ப தேங்க்ஸ்ப்பா."

பரத் அவனிடமிருந்து நகர்ந்து சுசிலாவிடம் வந்தான்.

"என்ன பரத்?" என்றாள் புரட்டிக் கொண்டிருந்த பத்திரிக்கையைப் போட்டு விட்டு எழுந்த சுசிலா.

"நல்ல வேளை. அவ இப்ப இல்லை." என்றான் பரத்.

"இருந்திருந்தா?"

"என்னைப் பார்த்ததும் எந்திரிச்சி ரூம் கதவைத் தாழ்ப்பாள் போட்டிருப்பாளாம். அவ்வளவு மோசமாம். பேண்ட், சட்டை மாட்டின திருஷ்டி பொம்மையைக் கூட திருடிக்கிட்டு போயிடுவா போலிருக்கு - பியூன் சொன்னதைப் பார்த்தா"

"நடத்தை சரியில்லையா அப்போ?"

"அப்படியும் சொல்லலாம். சுருக்கமா ஒரே வார்த்தையில 'லோலாய்'னும் சொல்லலாம். இப்ப அவ பழகிட்டிருக்கிற பணக்கார பார்ட்டியோட, ஆபீஸ்ல பர்மிஷன் போட்டுட்டு நகைக் கடைக்கு தன் பிறந்த நாளுக்காக தங்க நெக்லஸ் வாங்கப் போயிருக்காளாம்."

"இவ்வளவு தகவலை எப்படிச் சொன்னான் பியூன்?"

"நான் கொடுத்தது அம்பது ரூபா!"

"அம்பது ரூபாய்க்கு இவ்வளவு ரகசியங்கள் கிடைக்குதா?"

"அம்பது ரூபாய்க்கு இந்தியாவோட ராணுவ ரகசியங்களையே வித்திருக்காங்களே, மறந்துட்டியா? ஆனா இதில அம்பது ரூபா தவிரவும் அவன் உளறிக் கொட்றதுக்கு இன்னொரு காரணமும் இருக்கணும்."

"என்ன?"

"கண்ட புல்லும் மேயிற பசுதானேன்னு இவனும் கிட்டே போயிருப்பான். மாடு உதைச்சிருக்கும். அந்த பழிவெறியில கூட சொல்லியிருக்கலாம்."

"இந்த சின்னத்தனமான கற்பனை எல்லாம் நமக்குத் தேவையில்லை பரத். பியூன் சொல்றதை அப்படியே நம்பப் போறிங்களா?"

"கூடாது. நாம ஒரு தடவைப் பார்த்துடலாம்."

"அவ எந்த நகைக் கடைக்குப் போயிருக்காளாம்?"

"ஆனந்தி ஜுவல்லரின்னு மாம்பலத்தில இருக்கு."

"சரி, போய் அந்த பார்ட்டி யாருன்னும் பார்த்துடலாம். அந்த திவாகர் பாவம் நொந்து போயிடுவார், இல்லே?"

"ஆமாம் சுசி" என்ற பரத் காரில் ஆனந்தி ஜுவல்லரி நோக்கி போய்க் கொண்டிருந்த போது சொன்னான் "இப்படி ப்ரீதி ஒழுக்கம் இல்லாம நடந்துக்கறதுக்கு காரணமா ஒரு பழிவெறி இருக்கலாம் சுசி"

"இதில என்ன பழி இருக்க முடியும்?"



"சின்னத்தனமான என் கற்பனை என்ன சொல்லுதுன்னா, திவாகர் ரெப்ரசன்டேடிவ் இல்லையா, தங்கறு ஊர்ல எல்லாம் ஸாம்பிள் பார்த்திருக்கலாம். அது ப்ரீதிக்கு தெரிய வந்திருக்கலாம். முள்ளை முள்ளால எடுக்கணும், துரோகத்தை துரோகத்தால ஜெயிக்கணும்னு இப்படி ஆரம்பிச்சிருக்கலாம்."

"கற்பனையை மூடி வைங்க. ரொம்ப ஒழுகுது" என்றாள் சுசிலா.




நேரம் காலை மணி 11.00

ஆனந்தி ஜுவல்லரியின் வாசலில் பார்க் செய்யப்பட்ட ஏழெட்டு கார்களில் ஒரு காரில் டிரைவருக்கான யூனிஃபார்முடன், தன் சொந்த அடையாளங்களை விழுங்கின மாறு வேடத்துடன் டிரைவிங் சீட்டில் அமர்ந்து காத்திருந்தான் கிரண்.

அது நீல நிற அம்பாசிடர் கார். நேற்றிரவு பாரீஸ் கார்னரில் திருடப்பட்டு நம்பர் பிளேட் மாற்றப்பட்ட கார்!

ஆனந்தி ஜுவல்லரிக்குள் எக்கச்சக்கமான கூட்டம்! கறுப்புக் கறுப்பாக ஒரே தலைகள். வாங்க வந்தவர்கள், விற்க வந்தவர்கள், வைரக் கிரீடம் பார்க்க வந்தவர்கள், அவர்களுக்கு துணையாக வந்தவர்கள் என்று ஏகப்பட்டக் கூட்டம் நெருக்கியடிக்க...

அந்தக் கூட்டத்திற்கு நடுவில் நிதானமாக முன்னேறிக் கொண்டிருந்தார்கள் ராவும்,அலெக்சும்.

ராவ் நீளமான ஷெர்வானி கோட் அணிந்து, தலையில் புஸ்"புஸ்" என்று எம்.ஜி.ஆர். தொப்பி வைத்து, குறுந்தாடி, கூலிங்கிளாஸ், வாக்கிங் ஸ்டிக், சகிதமாக ஒரு பெரிய பணக்கார ஷேட் தோற்றத்தில் இருந்தான். அலெக்ஸ் தன் முடியை ஒரேப் பக்கமாக எண்ணெய் போட்டு வழித்து சீவி, கண்களைப் பெரிதாக்கிக் காட்டும் கனமான கண்ணாடி அணிந்து, வாயில் வெற்றிலைக் குதப்பலுடன், பஞ்சகச்சம், சின்ன கோட் என்று ஷேட்டின் காரியதரிசி போல மாறியிருந்தான்.

அவர்கள் இருவரும் நடந்தார்கள் என்பதை விட, மற்றவர்கள் அவர்களை நடத்தினார்கள் என்பதே சரி.

ராவ் கக்கத்தில் ஒருகறுப்பு பேக் இடுக்கியிருந்தான். ஒரு ஊழியனிடம், "சில்வர் அயிட்டம்ஸ் எங்கேப்பா?" என்றான்.

அவன் மேலே விரல் காட்டி "ஃபர்ஸ்ட் ஃப்ளோர்" என்றான்.

அகலமான மாடிப்படிகள். அங்கேதான் கொஞ்சம் கூட்டம் குறைவாக இருந்தது. படிகள் ஏறி மேலே வந்தார்கள்.

ஷோ கேஸ்கள் முழுக்க வெள்ளிப் பாத்திரங்கள் அடுக்கப்பட்டு, கவுண்ட்டர்களில் கூட்டமிருந்தாலும், கீழே தங்கம் பகுதியில் போலஅத்தனை நெரிசல் இல்லை.

"என்ன வேணும் சார்?" என்றான் ஒரு பேட்ச் குத்தின ஸேல்ஸ்மேன்.

"மூணு கிலோ எடையில வெள்ளிக்குடம் வேணும்" என்றான் அலெக்ஸ்.

"அதோ அந்தப் பக்கம் போங்க."

அவன் கை காட்டின அந்தப் பக்கத்தில்தான் வேணுகோபாலின் தனியறை இருந்தது. கதவு மூடியிருந்தது. இருவரும் வந்து அந்தப் பகுதியில் அந்தக் கதவை எந்த நேரமும் சமீபிக்க வசதியான இடத்தில் இருந்த குஷன் நாற்காலிகளில் அமர்ந்து கொண்டார்கள்.

ஸேல்ஸ்மேனிடம் தேவை சொல்லப்பட, அவன் இரண்டு மூன்று வெள்ளிக் குடங்களை எடுத்துக் காட்டினான்.

அதில் ஒரு குடம் எடுத்து, "இது எவ்வளவு வருதுன்னு பாருங்க" என்றான் ராவ்.

அவன் கால்குலேட்டரில் தட்டி, குறிப்புக் காகிதத்தில் எழுதிக் காட்டினான்.

"என்னப்பா கூலி, சேதாரம் ரொம்ப அதிகமாத் தெரியுதே. உங்க முதலாளியை எனக்கு நல்லாத் தெரியும். ஊர்ல இருக்காரா? இந்த ரூம்லதானே இருப்பாரு. இருக்காரா? நான் அவர் கிட்டேப் பேசி விலையை ஃபைனல் பண்ணிக்கிறேன்."

"கீழே கிரவுண்ட் ஃப்ளோர்ல அவர் பையன் இருக்கார் சார். அவரைப் பார்த்தா போதும். அவர் குறைச்சுப் போட்டு ஃபைனல் பண்ணுவார்" என்றான் அவன்.

"எனக்கு பையனை அறிமுகமில்லைப்பா. வேணு கோபாலைத் தான் தெரியும். ரெண்டு நிமிஷம் ஆகுமா? போய் மங்காராம் ஷேட்டுன்னு சொல்லு. சீட்டைக் காட்டிப் பேசிட்டு வந்துடறோம்" என்றான் அலெக்ஸ்.

அவன் வேறு வழியில்லாமல் சென்று கதவில் தட்டிவிட்டு உள்ளேப் போய் பேசிவிட்டுத் திரும்பி வந்து, 'வரச் சொல்றார்' என்றான். ராவும், அலெக்சும் விலை குறிக்கப்பட்ட காகிதத்தோடு அந்தத் தனியறைக்குள்



வந்தார்கள். ஏதோ கணக்கு பார்த்தபடி தன் உயரமான சுழல் நாற்காலியில் அமர்ந்திருந்த வேணு கோபால் நிமிர்ந்தார்.

"வாங்க, உக்காருங்க. உங்களை எனக்கு நினைவுக்கு வரலையே" என்றார்.

"என்ன சார், மறந்துட்டீங்களா? என் விசிட்டிங் கார்டு பார்த்திங்கன்னா நினைவுக்கு வரும்" என்ற ராவ் தன் கோட் பாக்கெட்டில் கையை நுழைத்து வெளியே எடுத்த பொருளின் பெயர் ஆங்கிலத்தில் ரிவால்வர்! தமிழில் துப்பாக்கி!

வேணுகோபால் பதறி, 'என்னது!" என்று எழப் போக, அவரை நெருங்கி நெற்றிப் பொட்டில் முனையை வைத்தான் ராவ். "உக்காருங்க."

அரண்டுபோய் அமர்ந்த வேணுகோபாலுக்கு அதே விநாடியில் நெற்றி முழுக்க வியர்த்து விட்டது. அலெக்ஸ் தன் ஹேண்ட் பேக் திறந்து அந்த பெல்ட் எடுத்தான். பட்டையான அந்த பெல்ட்டை அவர் மார்பில் பொருத்தி பக்கிள்ஸ் போட்டான். பெல்ட்டோடு பாம் பொருத்தப் பட்டிருந்தது.

"என்ன செய்யறீங்க?" பதறினார் வேணுகோபால்.

"ஷ்! கேள்வி கேக்கக் கூடாது. ஆர்.டி.எக்ஸ். வெடி மருந்து நிரப்பின பாம் இந்த பெல்ட்ல இருக்கு. இப்ப என் கையில இருக்கிற இந்த ரிமோட் கண்ட்ரோல்ல இந்த சின்ன பட்டனை நான் அழுத்தக்கூட வேணாம். லேசாத் தொட்டால போதும். ஃபெதர்ஸ் டச்! தொடட்டுமா?" என்றான் அலெக்ஸ்.

"ஓ! கடவுளே! வேணாம்! என்னை எதுவும் செஞ்சிடாதே! நான் வெடிச்சிச் சிதறி செத்துப் போய்டுவேன்"

"புரிஞ்சுதா? அப்ப நல்ல பிள்ளையா நாங்க சொல்றபடி எல்லாம் நடந்துக்கணும். செய்யறீங்களா?" என்றான் துப்பாக்கியை அவர் நெற்றிப் பொட்டிலிருந்து எடுத்த ராவ்.

"செய்யறேன். நீங்க எது சொன்னாலும் செய்யறேன். என்னை உயிரோடு விட்டால் போதும்." கெஞ்சினார் வேணுகோபால்.

"சரி, உங்க உயிரோட மதிப்பு என்ன? புரியலையா? சரி, உங்களுக்கு எவ்வளவு சொத்து தேறும்?"

"அறநூறு கோடி தேறும்."

"அதில் ஃபைவ் பர்ஸண்ட் தான் நாங்க கேக்கறது. ரொம்ப சீப் இல்லை உங்க உயிரு? ரைட், இப்போ நீங்க போன் செஞ்சி உங்க பையனை இங்கே வரச் சொல்லுங்க! பையனை மட்டும்!"

வேணுகோபால் கை நடுங்க இண்டர்காம் எடுத்து

"என் ரூமுக்கு உடனே வா! நீ மட்டும் வா!" என்று சொல்லி வைத்தார்.

ராவ் கதவருகில் சென்று காத்திருந்தான். அடுத்த நிமிடத்தின் துவக்கத்தில் உள்ளே நுழைந்த வேணுகோபாலின் மகன் தாமோதரன் உள்ளே வந்ததும் ராவ் அவன் நெஞ்சில் துப்பாக்கி வைத்ததும் வெலவெலத்துப் போனான் அவன்.

விபரீதமான நிலைமையை அவனுக்கு உணர்த்துவதற்கு இரண்டு நிமிடங்களும் சில வாக்கியங்களும் செலவாகின.

''இத பாருப்பா தாமோதரா, இப்போ உன்னோட அப்பாவை உன் கண் எதிர்க்க பட்டாசு வெடிக்கிற மாதிரி நாங்க வெடிச்சு சிதறடிக்காம இருக்கணுமின்னா நாங்க சொல்ற மாதிரி செய்யணும்" என்ற அலெக்ஸ் அவன் என்ன செய்ய வேண்டும் என்பதைச் சொன்னான். "இவனும் உன் கூடவே வருவான். சொன்னதை மீறி வேற ஏதாச்சும் சொன்னா இங்கே அப்பா சதைத் துண்டுகளாகத்தான் உனக்கு கிடைப்பாரு. ம். புறப்படு."

ராவும், தாமோதரனும் மட்டும் அறையை விட்டு வெளியேற, கதவைத் தாழிட்ட அலெக்ஸ் கையில் அந்த ரிமோட் பீஸுடன் வேணுகோபாலுக்கு எதிர் நாற்காலியில் அமர்ந்து கால் மேல் கால் போட்டுக் கொண்டான்.




பரத்தும், சுசிலாவும் ஆனந்தி ஜுவல்லரிக்குள் நுழைந்ததும், கூட்டத்தைப் பார்த்து வியந்த பரத், "மை காட்! இந்தியா ஏழை நாடுன்னு நீ நம்புவியா? இந்த கூட்டத்தில போட்டோல பார்த்த ப்ரீதி முகத்தை ஞாபகம் வெச்சி அவளைத் தேடிக் கண்டுபிடிக்க முடியுமா சுசி?"

''கொஞ்சம் கஷ்டம்தான்! பரத். இவ்வளவு கூட்டத்துக்கு என்ன காரணம்னு எனக்குப் புரிஞ்சு போச்சு. இந்த கடையில தானே மண்டலதேவிக்கான வைரக் கிரீடம் பொது மக்களோட பார்வைக்கு வெச்சிருக்காங்க? பேப்பர்ல படிச்சமே" என்றாள் சுசிலா.

"சுசிலா, பத்திரம்! ரொம்ப வேல்யபிள்!"

"என்னது?"

"ஜீரோஸ்தான்" என்றவன் பார்வையை கவனித்து, ரகசியமாக பரத்தின் பின் பகுதியில் கிள்ளினாள் சுசிலா.



"கூட்டம் தர்ற தைரியமா? நகர்ந்துகிட்டே இரு. பின்னாடி பாரு தள்றாங்க."

"ரொம்ப மோசம் பரத். இப்படித்தான் பதிலுக்குக் கிள்ளணுமா?"

"பாவி! இப்ப நான் கிள்ளலை சுசி. எந்த ராஸ்கல்?" என்று திரும்பினான். கடந்து சென்ற நான்கைந்து இளைஞர்களில் யாரும் சலனம் காட்டவில்லை

"பரத், நான் பார்த்த வரைக்கும் அந்த ப்ரீதியைக் காணோம். அவ வந்துட்டுப் போயிருக்கணும். இல்லைன்னாலும் இந்தக் கூட்டத்தில கண்டுபிடிக்கிறது சிரமம். இது கடையா? இல்லை! கடல்!"

"வெளில போய் வாசல்ல நிக்கலாம். அரை மணிநேரம் வெய்ட் பண்ணி வெளில வர்றவங்கள்ல ப்ரீதி இருக்காளான்னு கவனிக்கலாம். அது கொஞ்சம் ஈஸி"

"பரத், வந்தது வந்துட்டோம். அந்த வைரக் கிரீடத்தைப் பார்த்துட்டுப்போயிடலாமா? முப்பது கோடிக்கு வைரக் கிரீடம்! பிரமாண்டம் இல்லே?"

"சரி, வா" என்றான் பரத்.

மனிதர்களுக்கு நடுவில் நுழைந்து நுழைந்து நடந்து படிகள் ஏறி மூன்றாவது மாடி வந்தார்கள். வைர கிரீடம் வைக்கப் பட்டிருந்த அறை வாசலில் இருபது, முப்பது பேர் கியூவில் நின்றிருக்க, இவர்களும் சென்று வரிசையின் இறுதியில் சேர்ந்து கொண்டார்கள்.

"ஏன் பரத், இந்த நகைக் கடை ஓனர் பையன் உங்களுக்கு ஃபிரண்டுன்னு சொல்விங்களே, நாமும் கியூவில் நின்னுதான் போய்ப் பார்க்கணுமா?"

''அவன் ஃபிரண்டு இல்லை. காலேஜ்ல என் கிளாஸ்ல படிச்சான். நெருக்கம் கிடையாது. கடைசி வரைக்கும் என்னங்க, வாங்க, போங்கன்னுதான் பேசிட்டிருந்தோம். அவன் பேர் கூட எனக்கு சரியா ஞாபகமில்லை. இந்த வைரக் கிரீடத்தைப் பார்க்கறதுக்காக அவன் கிட்டேப் போயி பல்லிளிக்கச் சொல்றியா? விடு. கூட்டம் கம்மிதான். ரொம்ப நேரம் வெய்ட் பண்ண வேண்டியிருக்காது."

அவர்கள் மெதுவாக நகர்ந்து அந்த அறையை நோக்கி முன்னேறிக் கொண்டிருக்க, தாமோதரனும் ராவும் அங்கே வந்த சேர்ந்து, அறைக்குள் இருந்த இன்ஸ்பெக்டரை கை காட்டி வெளியே அழைத்தான் தாமோதரன்.

இன்ஸ்பெக்டர் வெளியே வந்து, "என்ன சார்?" என்றார்.

பரத் சுசிலாவிடம் தூரத்தில் நின்றபடி தாமோதரனைக் காட்டி, "அதோ அந்த இன்ஸ்பெக்டர்கிட்டேப் பேசிட்டி

ருக்கான் பாரு! அவன்தான் ஓனர் பையன். பேரு... தாவுல ஆரம்பிக்கும்" என்றான்.

இன்ஸ்பெக்டரைப் பார்த்து தாமோதரன், அலெக்ஸ் சற்று முன் சொல்லிக் கொடுத்தபடி, "சார், இவர் ஸ்ரீராமுடு ரெட்டிகாரு. மண்டல தேவி கோயில் நிர்வாக கமிட்டில செயலாளர்" என்று ராவை அறிமுகம் செய்து வைத்து, "வைரக் கிரீடத்துக்கு நாலு நாளைக்கு சில விசேஷ பூஜைகள் செய்ய வேண்டியிருக்குதாம். அதனால இன்னைக்கே வாங்கிட்டுப் போறதுக்காக வந்திருக்காங்க" என்றான்.

"அப்படியா? ஸோ, இன்னைக்கோட எங்க டூட்டி முடிஞ்சதா?"

"இப்பவே!" என்றான் ராவ்.

"ஆமாம் சார். இன்னும் பத்து நிமிஷத்தில இவங்க நகையோட புறப்படறப் போறாங்க. கூடவே அப்பாவும் போறாரு. அதனால வரிசைல நிக்கிறவங்களை எல்லாம் கலைஞ்சி போகச் சொல்லிடுங்க. ரூமுக்குள்ளே இருக்கிறவங்களையும் வெளியேத்திட்டு உங்க போலீஸ்காரர்களையும் வெளியே வரச் சொல்லிடுங்க சார்."

"ஓக்கே" என்ற இன்ஸ்பெக்டர் உடனே கூட்டத்தைக் கலைந்து போகச் சொல்ல, பரத், போலீஸ் கான்ஸ்டபிளிடம் காரணம் கேட்டான்.

"நகை இப்பவே கோயில் நிர்வாகத்துக்கிட்டே ஒப்படைக்கிறாங்களாம்" என்றார்.

"பரத், இவ்வளவு தூரம் வந்துட்டு அதைப் பார்க்காமப் போறதா? ஒரே ஒரு நிமிஷம் பார்த்துடலாம். வாங்க பரத், மத்தவங்க கலைஞ்சு போனதும் நீங்க உங்க ஃபிரண்டு கிட்டேப் போய்ப் பேசுங்க" என்றாள் சுசிலா.

சில நிமிடங்களில் அங்கிருந்தவர்கள், அறைக்குள் கிரீடம் பார்த்துக் கொண்டிருந்தவர்கள் அனைவரும் கீழே அனுப்பப்பட, போலீஸ்காரர்கள் தவிர தாமோதரனும், ராவும் நிற்க அவர்களை நோக்கி பரத் - சுசிலா வந்தார்கள்.

"ஹலோ, எப்படி இருக்கிங்க?" என்றான் பரத் புன்னகையோடு.

தாமோதரன் அடையாளம் புரிந்து கொண்டு, "பரத்! எவ்வளவு நாளாச்சு உங்களைப் பார்த்து!" என்றவன் வாஞ்சையாகக் கை கோர்த்துக் கொண்டு, ரொம்ப டேஞ்சரான தொழில் பார்க்கறிங்க போலிருக்கே. கேள்விப்பட்டேன். காலேஜ் படிக்கிறப்பவே உங்களுக்கு அபாயம்னா ரொம்பப் பிடிக்கும் இல்லை. ஆபத்துக்குப் பாவமில்லைன்னு துணிஞ்சு, இறங்கி, உதவிகள் செய்யறவராச்சே.



இவங்கதான் சுசிலாவா?" என்றான்.

"ஆமாம். கிரீடம் பார்க்கணும்னு சொன்னதாலே வந்தோம். திடுதிப்புன்னு எல்லோரையும் துரத்திட்டிங்களே! அப்படி என்ன அவசரம்?"

தாமோதரன் இன்ஸ்பெக்டரிடம் சொன்னதையே இவர்களிடமும் சொல்லி விட்டு ராமுடு ரெட்டி என்று அறிமுகப்படுத்தி விபரம் சொன்னான்.

"ஒரே ஒரு நிமிஷம் பார்த்திட்டு வந்திடறோம். ப்ளீஸ்" என்று பரத் மறுபடி கை குலுக்கி, "இன்னொரு நாள் ஃப்ரியா பேசலாம்" என்றான்.

பரத், சுசிலா படிகளில் இறங்கினார்கள்.

இரண்டாவது மாடிக்கு வந்ததும் சுசிலாவை ஓரமாக இழுத்த பரத், "ஏதோ ஒரு சிக்கல் மாதிரி தெரியுது சுசி. அவன் என்கிட்டே இவ்வளவு உரிமையில் பேசறவன் இல்லை. ஃபுல் ஏசி, எனக்குக் குளிருது. ஆனா அவனுக்கு முகம் பூரா வேர்த்துக் கொட்டியிருந்ததை கவனிச்சியா? கை குலுக்கினப்போ உள்ளங்கையில ஒரு விரலால் சுரண்டினான் சுசி. அதுக்கு அர்த்தம் புரியலை."

"பரத், ரெட்டின்னு ஒருத்தனை அறிமுகம் செஞ்சி வெச்சாருல்லே. அவரோட தாடி நேச்சுரலாவே இல்லை. ரொம்ப கிட்டே நின்னு பார்த்ததால ஒட்ட வெச்ச தாடி மாதிரி எனக்கு ஒரு பிரமை ஏற்பட்டது."

"சுசி, இரு! அவன் என் கிட்டே ஏதோ ஒரு செய்தியை சொல்ல முயற்சி செஞ்சிருக்கான். அவன் என்னை டேஞ்ஜரான தொழில்ல இருக்கிறதாச் சொன்னான். அபாயம்னா பிடிக்கும்னான். ஆபத்துக்குப் பாவமில்லைன்னு நான் செயல்ல இறங்குவேன்னான். டேஞ்ஜர்! அபாயம்! ஆபத்து! இதைத் தான் அவன் உணர்த்தியிருக்கிறான். வா, மறுபடி மேலே போகலாம். அவனை விட்டு விலகவே கூடாது. போலீசை விட்டு அந்த தாடிக்காரனை தனியாப் பிரிச்சு அவன் உண்மையா கோயில் நிர்வாகத்தைச் சேர்ந்தவன்தானான்னு உறுதி செஞ்சுக்கச் சொல்லணும். கமான்."

மனித இடைஞ்சல்களுக்கு நடுவில் அவர்கள் மூன்றாவது மாடிக்கு வந்த போது அங்கே யாரும் இல்லை. கிரீடம் வைக்கப்பட்ட அறை திறந்திருந்தது. உள்ளே மேஜை மேல் கிரீடம் வைக்கப்பட்டிருந்த கண்ணாடிப் பெட்டி திறந்திருந்தது.

"சுசி, கிரீடம் இல்லை பாரு! வா! கீழே போலாம்." இருவரும் லிஃப்டுக்கு ஓடி வந்து பட்டனை அழுத்திப் பார்த்து லிஃப்ட் வராததால் பொறுமையிழந்து படிகளில்

இறங்கினார்கள் வேகமாக. கிரவுண்ட் ஃப்ளோருக்கு வந்த போது, கண்ணாடிக் கதவுகள் வழியாக கடைக்கு வெளியில் ஒரு காரில் தாடிக்கார ரெட்டியும், இன்னொரு கண்ணாடி புட்டியும், தாமோதரனின் அப்பாவும் ஏறிக் கொண்டிருக்க, அந்தக் காரை வழியனுப்பும் விதமாக தாமோதரனும், போலீஸ் இன்ஸ்பெக்டர் மற்றும் கான்ஸ்டபிள்கள் நின்றிருந்தார்கள்.

பரத், சுசிலா மக்களை விலக்கி, மக்களை மோதி, மக்களைத் தள்ளிப் பாய்ந்து வாசலை அடைந்து, கண்ணாடிக் கதவு தள்ளி வெளியே வந்த போது, அந்தக் கார் புறப்பட்டு தூரத்தில் போயிருக்க...

இன்ஸ்பெக்டர் தாமோதரனின் கையைப் பிடித்துக் குலுக்கி, "எங்க பொறுப்பு முடிஞ்சது" என்று சொல்லி விலகி ஜீப்பில் ஏறிக் கொண்ட போது...

பரத், தாமோதரன் அருகில் வந்து சற்றே மூச்சு வாங்கி, "ஏதாச்சும் பிராப்ளமா? எதுவும் இல்லையே? மாடியில எனக்கு ஏதோ மறைமுகமா சொல்ல விரும்பின மாதிரி இருந்திச்சு. அதான் கேட்டேன்" என்றான்.

''உள்ளேப் போய்ப் பேசலாம்" என்ற தாமோதரன் அவர்கள் இருவரையும் இரண்டாவது மாடிக்கு தன் அப்பாவின் தனியறைக்கு அழைத்து வந்து கதவை மூடி விட்டு நடந்ததை எல்லாம் சொன்னான்.

"அடப்பாவிங்களா! அத்தனை பேர் பார்த்துக்கிட்டிருக்கிறப்ப இப்படி கொள்ளையடிச்சிட்டுப் போயிருக்காங்களே" என்றாள் சுசிலா.

"ஐம் ஹெல்ப்லெஸ். அப்பா உடம்பில் வெடிகுண்டு. ஒருத்தன் அதை வெடிக்கிறதுக்கு தயாரா இருக்கான். நான் என்ன செய்யறது? கார் புறப்பட்டுப் போனப்புறமும் நான் போலீசுக்குச் சொல்லக் கூடாதுன்னு மிரட்டியிருக்காங்க. அவங்க டீம்ல வேற ஆள் என்னை கண்காணிப்பானாம். நான் போலீஸ்ல சொன்னதாத் தெரிஞ்சா வயர்லெஸ்ல அவங்களுக்குத் தகவல் தருவானாம். அவங்க உடனே எங்கப்பாவைக் கொலை செஞ்சிடுவாங்களாம். நான் தகவல் தராம இருந்தா அப்பாவை அவங்க பாதுகாப்பான தூரத்துக்குப் போனதும் உயிரோட இறக்கி விட்டுடுவாங்களாம். நான் என்ன செய்றது? எனக்கு முப்பது கோடி கிரீடம் முக்கியமில்லை. என் அப்பாதான் முக்கியம். அதனால தான் தேங்ஸ் சொல்லி இன்ஸ்பெக்டரையும், போலீஸ்காரங்களையும் அனுப்பி வெச்சிட்டேன்" என்றான் தாமோர்தரன்.



"நீங்க விரலை சுரண்டினதுமே ஏதோ குழப்பம்னு புரிஞ்சது. ஆனா கரெக்டா புரிஞ்சுக்க கொஞ்சம் லேட்டாயிடுச்சு" என்றான் பரத்.

"அந்த நிமிஷமே நீங்க தெளிவா என் சிக்கலை புரிஞ்சிக்கிட்டு இருந்தாக் கூட எதுவும் செய்திருக்க முடியாது."

"ஏன், அந்த தாடிக்காரனை மடக்கியிருக்கலாமே" என்றாள் சுசிலா.

"மடக்கி என்ன பிரயோஜனம்? இந்த ரூம்ல அப்பா மேலே வெடிகுண்டு பெல்ட் கட்டி விட்டுட்டு இன்னொருத்தன் தயாரா உக்காந்திருந்தானே"

"கொஞ்சம் ரிஸ்க்கான சூழ்நிலைதான். அவங்க போன கார் நம்பரை கவனிச்சிங்களா நீங்க?"

"நீலக் கலர் அம்பாஸடர் கார், நம்பர்..." என்று தாமோதரன் ஒரு காகிதத்தில் பேனாவில் குறித்துக் காட்டினான்.

"ஒண்ணு செய்யலாம். டிராஃபிக் போலீஸ்ல தகவல் சொல்லி, கார் போன திசை சொல்லி கண்காணிக்கச் சொல்லலாமா?"

"பயமா இருக்கு. அவங்க காரை போலீஸ் தொடர்றது தெரிஞ்சா ஆத்திரத்தில எங்கப்பாவை ஏதாச்சும் செஞ்சுட்டா? பரத், வேணாம்! ரிஸ்க் வேணாம். எங்கப்பா பத்திரமா திரும்பி வரட்டும். அதுக்கப்புறம் கிரீடம் கொள்ளை போன விஷயத்தை போலீசுக்குச் சொல்லலாம். அதுக்கு முன்னாடி வேணாம்" என்றான் தாமோதரன்.

கால் மணி நேரத்தில் ஒலித்த போனை ஆர்வமாக எடுத்தான் தாமோதரன்.

"ஹலோ மிஸ்டர் தாமோதரன், உங்க அப்பாவை பனகல் பார்க் உள்ளே ஒரு சிமெண்ட் பெஞ்சுல படுக்க வெச்சிருக்கோம். மயக்கம்தான். கவலைப்பட வேண்டாம். ஒத்துழைச்சதுக்கு தேங்ஸ்" என்று சொல்லிவிட்டு தொடர்பு துண்டிக்கப்பட்டது.




**மா**லைச் செய்தித்தாள்களிலேயே செய்தி வந்து விட்டது.

'வைரக்கிரீடம் நூதன முறையில் கொள்ளை!' என்று தலைப்பு போட்டு சகல விபரங்களும் வெளியிட்டிருந்தார்கள். மேலும்...

'மயக்கத்தில் இருந்து திரும்பிய, நகைக் கடை அதிபர் வேணுகோபாலை போலீசார் தீவிரமாக விசாரித்தார்கள்.

அவர்கள் தப்பிச் செல்லப் பயன்படுத்திய நீல நிற அம்பாஸிடர் காரை ராயப்பேட்டை மணிக்கூண்டு அருகில் போலீசார் கண்டுபிடித்தனர்.

இந்த வழக்கை விசாரிக்கும் தலைமைப் பொறுப்பு ஏற்றுள்ள டி.ஐ.ஜி. சாமிநாதன் 'உடனடியாக மோப்ப நாய்கள் வரவழைக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டன என்றும், ஒரு தனி போலீஸ்படை நியமிக்கப்பட்டு நாலா பக்கங்களிலும் குற்றவாளிகளைத் தேடி வருவதாகவும் தெரிவித்தார்.

குற்றவாளிகள் இரண்டுக்கும் மேற்பட்ட வாகனங்களில் மாறி தங்கள் இருப்பிடத்திற்குச் சென்றிருக்கலாம் என்றும் சொன்னார். தரை, ஆகாயம் மற்றும் கடல் மார்க்கங்களில் அந்த வைரக் கிரீடம் நகரை விட்டு செல்ல முடியாதபடி தீவிர சோதனைகளை மேற்கொள்ள உத்தரவிட்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

-செய்தித்தாளைப் படித்து விட்டுத் தூக்கிப் போட்ட கிரண் சிகரெட்டை ஆழமாகப் புகைத்தான்.

"அலெக்ஸ், கதவை மூடிட்டு வா. ஆசையா ஒரு தடவை அந்தக் கிரீடத்தைப் பார்த்துடலாம்" என்றான் ராவ்.

அலெக்ஸ் எழுந்து சென்று அறைக் கதவைத் தாழிட்டு விட்டு வந்து அமர்ந்தான். அவர்கள் மூவரும் சொந்த அடையாளங்களில் இருந்தார்கள். மணி ஐந்தரையை நெருங்கிக் கொண்டிருந்தது.

கிரண் அந்த லெதர் சூட்கேசின் ஜிப்பை இழுத்துத் திறந்தான். உள்ளே ஒரு டர்க்கி டவலில் சுற்றப்பட்ட கிரீடம் இருந்தது. எடுத்து டர்க்கி டவலை நீக்கி கிரீடத்தைக் கையில் எடுத்துப் பார்த்து அதற்கு ஒரு முத்தம் கொடுத்து, தன் தலையில் வைத்துக் கொண்டு கண்ணாடி பார்த்தான். திரும்பி அவர்களைப் பார்த்தான்.

"எப்படி இருக்கு?"

"ஜ்வலிக்குது. இத்தனை ஈஸியா காரியம் முடியும்னு நான் எதிர்பார்க்கவேயில்லை" என்றான் அலெக்ஸ்.

"திடீர்னு பரத் - சுசிலாவை அங்கேப் பார்த்ததும் திடுக்குனு இருந்தது. அவங்க பாவம் சாதாரணமா கிரீடம் பார்க்க வந்திருக்காங்க. தாமோதரனுக்கு ஃப்ரெண்டு போலிருக்கு. கடைசில போலீசுக்கும், அவங்களுக்கும் சேர்த்து பெப்பே காட்டிட்டு அடிச்சுட்டு வந்தாச்சு." என்றான் ராவ்.

"முப்பது கோடி" என்றான் கிரண்.

"பாதி வேலைதான் முடிஞ்சிருக்கு. டி.ஐ.ஜி. தனிப்படை அமைச்சி தீவிரமா நம்மைத் தேடிட்டிருக்கார். பரத் - சுசிலாவும் இதில இறங்கலாம். அதனால இதைக் கை



மாத்தி பணம் நம்ம கைக்கு வந்தப்புறம் தான் முழுசா சந்தோஷப் படணும்."

"அலெக்ஸ், நீ வொர்ரி பண்ணிக்க வேண்டிய அவசியமில்லை. மூணு பேரும் மாறு வேஷத்தில இருந்தோம். காரோ திருடப்பட்டது. எத்தனைப் பேர் நம்மைப் பத்தி அடையாளம் சொன்னாலும் அது போலி அடையாளமாத்தான் இருக்கும்."

"சரி, இப்போ கிரீடம் கை மாத்தறது பத்திப் பேசலாம். பம்பாய்ல சுலைமான் சேட் இருபத்தஞ்சி தர்றேன்னு சொன்னார். ரிஸ்க் எடுக்கிறதுக்கு அவங்களுக்கும் லாபம் வேணாமா? பொருள் நம்ம கைக்கு வந்ததும் போன் செய்யறதாச் சொல்லிருந்தோம். பணத்தோட புறப்பட்டு வரச் சொல்லலாம். வாங்கிக்கிட்டு ஒப்படைச்சுடலாம்."

"சரி, இத்தனை போலீஸ் கெடுபிடி தாண்டி சுலைமான் சேட் மட்டும் கிரீடத்தை எப்படி பாம்பேக்கு எடுத்துட்டுப் போவாரு?"

"அதை நான் அன்னைக்கேக் கேட்டுட்டேன். சுலைமான் சேட் தொழில் வித்தை தெரிஞ்சவரு. கையோட எலெக்ட்ரிக் ஹீட்டர் எடுத்துட்டு வருவாராம். வைரத்தை எல்லாம் தனியாப் பேர்த்து எடுத்துட்டு, கிரீடத்தை உருக்கி தங்கக் கட்டியாக்கிடுவாராம். அப்புறம் அதை எடுத்திட்டுப் போறதுக்கும் வேறு ட்ரிக்ஸ் வெச்சிருக்காராம். அதெல்லாம் அவர் பிரச்னை, நமக்கென்ன? இருபத்தஞ்சிக்கு ஓக்கேயா?" என்றான் அலெக்ஸ்.

"நாம என்ன முதல்போட்டு தயாரிச்சோமா என்ன? வெறும் லட்ச ரூபா கொடுத்தாக்கூட அது கொள்ளை லாபம் தானே? ஓக்கே. சுலைமான் சேட் சொன்ன தொகையை எடுத்துக்கிட்டு நாளைக்கே புறப்பட்டு வரச் சொல்லிடலாம்" என்றான் ராவ்.

"இந்த ஹோட்டல் வேணாம். நம்ம வழக்கமான இடத்துக்கு வரச் சொல்லிடலாம்" என்றான் கிரண்.

"கிரண், நீயே பேசிடு. உனக்குத்தான் ஹிந்தி சரளம்" என்றான் அலெக்ஸ். "இப்பவேப் பேசிடு. கோட் வர்ட்ஸ் யூஸ் பண்ணிப் பேசு"

"தெரியாதா எனக்கு?" என்று கிரண் டெலிபோனை எடுத்து ஹோட்டலின் டெலிபோன் போர்டுக்கான எண்ணை அழைத்து, "ஒரு எஸ்.டி.டி. கால் டு பாம்பே, நம்பர் சொல்றேன், குறிச்சுக்கங்க" என்றான்.

"எக்ஸ்க்யூஸ் மி சார், இங்கே எஸ்.டி.டி. ஃபெஸிலிடில ப்ராப்ளம் இருக்கு. சரி பார்த்துட்டுருக்காங்க, ஒன் ஆர்ட்டு

அவர்ஸ் ஆகும். உங்களுக்கு அர்ஜெண்ட்னா பக்கத்தில நாலாவது பில்டிங்லேயே பூத் இருக்கு. அவசரம் இல்லைன்னா ட்டு அவர்ஸ் கழிச்சு லைன் வாங்கித் தர்றேன்" என்றான் டெலிபோன் ஆபரேட்டர்.

"எனக்கு அர்ஜெண்ட்" என்று போனை வைத்து விட்டு கிரண், "நான் பக்கத்தில போய் பண்ணிட்டு வந்துடறேன்" என்று புறப்பட்டான். "பீர் சொல்லுங்க, அதுக்குள்ளே வந்துடறேன்."

சொன்னபடி பீர் சப்ளையாவதற்குள் திரும்பி விட்டான் கிரண். "பேசிட்டேன். சுலைமான் சேட்டே பேசினார். நாளைக்கு எந்த ஃபிளைட்ல டிக்கெட் கிடைக்குதோ, புக் பண்ணிட்டு பணத்தோட வர்றதா சொல்லிட்டார். அவரே வர்றாராம். டிக்கெட் அரேன்ஜ் ஆனதும் போன் செஞ்சி தகவல் தர்றேன்னும் சொல்லிட்டார்." என்றான்.

பீர் வந்ததும் மூவரும் குடித்து விட்டுப் பேசினார்கள். கொஞ்ச நேரத்தில் ராவ், அலெக்ஸ் புறப்பட்டுச் சென்றதும் கிரண் லோக்கல் கால் இவனே டயல் செய்தான்.

"அலோ" என்று எதிர்முனையில் பெண் குரல் கேட்டது.

"ஹேய்! நான் கிரண். புறப்பட்டு வர்றியா?" என்றான்.

"எப்போ?"

"இப்பவே புறப்பட்டு வா"

"ஆச்சரியமா இருக்கே கிரண்! இந்த வாரத்தில் என்னைக் கூப்புடறது மூணாவது தடவை."

"அவ்வளவு சந்தோஷமா இருக்கேன். அப்படியும் சொல்லலாம்."

"வேற எப்படி சொல்லலாம்?"

"அவ்வளவு தூரம் வித்தை காட்டறே நீன்னும் சொல்லலாம்."

"ச்சீ"

"டயத்தை வேஸ்ட் பண்ணாம புறப்பட்டு வா."

"சரி."

கிரண் போனை வைத்து விட்டு கிரீடம் உள்ள லெதர் சூட்கேஸை மட்டும் கட்டிலுக்கு அடியில் தள்ளி வைத்தான். பாருக்கு போன் செய்து அரை பாட்டில் விஸ்கி ஆர்டர் செய்தான். அதற்காகவும், அவளுக்காகவும் காத்திருந்தான்.

○

"**எ**ன்னாச்சு சுசி?" என்றான் பரத்.

சுசிலா மறுபடி ஒரு முறை டெலிபோனில் முயற்சி செய்து விட்டு, "நியூட்டனோட லைன் என்கேஜ்டாவே இருக்கு பரத். நான் என்ன செய்யறது?" என்றாள்.



பரத் கையில் இருந்த அந்த ஜெம் கிளிப் அஷ்டகோணலாக வளைந்து கொண்டிருந்தது.

"என்னதான் வேணுகோபால் உயிரோட பத்திரமா திரும்பக் கிடைச்சுட்டாருன்னாலும், நம்ம கண் எதிர்ல அந்த கிரீடத்தை அந்தக் கொள்ளைக்காரப் பசங்க அடிச்சிட்டு போனதை என்னாலே தாங்கவே முடியலை சுசி. அவங்களை போலீஸ்காரங்க பிடிச்சி கிரீடத்தை மீட்டுட்டா என் மனசு நிம்மதியாகும். தாமோதரன் இவ்வளவுக்கும் எனக்கு மறைமுகமா செய்தி கொடுத்தும் என்னால எதுவும் செய்ய முடியாமப் போச்சு பாரு" என்றான் பரத்.

"புலம்பாதிங்க பரத். வெய்ட், ரிங் போகுது. இந்தாங்க" சுசிலா நீட்டின ரிசீவரை வாங்கிக் கொண்டு, "ஹலோ, நியூட்டன், குட் ஈவினிங்" என்றான்.

"குட் ஈவினிங் பரத், சொல்லுங்க."

"என்னாச்சு கிரீடம்? பிடிச்சுட்டிங்களா?"

"எங்கே? அவன் போன கார் திருடப்பட்ட கார்! அவங்களோட அடையாளங்களை நூறு பேர் சொல்றாங்க. அந்த அடையாளத்தில நம்ம எக்ஸ் கிரிமினல்ஸ் ஃபைல்ல யாரும் இல்லைன்னு கம்ப்யூட்டர் சொல்லிடுச்சி. எல்லா ரோட்லயும் செக் போஸ்ட்ஸ் போட்ருக்கோம். ரெயில்வே ஸ்டேஷன்ஸ், ஏர்போர்ட், ஹார்பர் இப்படி எல்லா இடத்திலேயும் நிறைய போலீஸ்காரங்க, தரோவா எல்லாப் பயணிகளோட லக்கேஜ்களையும் செக் பண்ணிதான் அனுப்பறோம்."

"எனக்கு ஒரு சின்ன ஐடியா ஃப்ளாஷ் ஆச்சி. அதை உங்க கிட்டே சொல்லலாம்னுதான் கூப்பிட்டேன்."

"சொல்லுங்க பரத். வொர்க் அவுட் ஆனா சன்மானம் உண்டு."

"கிண்டலா? என் கண் முன்னாடி நடந்ததால ஒரு இண்ட்ரெஸ்ட். என் ஐடியா வேணாம்னா விட்டுடுங்க."

"சும்மா தமாஷ் பண்ணக் கூடாதா? உங்க யோசனையை என்னைக்கு அலட்சியப்படுத்தியிருக்கேன் நான்?"

"அவங்க மொத்தம் மூணு பேர் இல்லையா? ஒருத்தன் கார்ல வெய்ட் பண்ணிருக்கான். ஒருத்தன் வேணுகோபாலை மிரட்டல் முனையில அவரோட ரூம்ல வெச்சிருந்தான். ஸ்ரீராமுடு ரெட்டியார்னு அறிமுகப்படுத்தப்பட்ட மூணாவது ஆள் தான் தாமோதரனோட வந்து பொது மக்களை கலைஞ்சி போகச் சொன்னது. அப்போ நாங்க ரெண்டு பேரும் பர்மிஷன் வாங்கி கிரீடம் பார்க்க அந்த தனி ரூமுக்குள்ளேப் போனப்ப அவங்களும் உள்ளே

வந்தாங்க. அந்த ரூமில வைக்கப் பட்டிருக்கிற வீடியோ கேமரால ஸ்ரீராமுடு ரெட்டியார் வேஷத்தில இருந்தவன் பதிவாகியிருக்கணும் சரியா?"

"கரெக்ட். பதிவாகியிருக்கான். அதைப் போட்டுப் பார்த்து, அதிலேர்ந்து ஃபோட்டோ பண்ணிதான் ஏர்போர்ட், ஸ்டேஷன்ல நிக்கிற போலிஸ்காரங்களுக்கு காப்பீஸ் கொடுத்தனுப்பியிருக்கோம்."

"அந்த ரூம்ல பத்துப் பத்து பேராதான் அனுமதிக்கப்பட்டிருக்காங்க. அதனால உள்ளே நுழைஞ்ச ஒவ்வொருத்தரோட முகமும் கேமிராவில தெளிவாப் பதிவாகி யிருக்கும்."

"சரி, அதுக்கென்ன?"

"ரெண்டு நாளா அந்த கிரீடம் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தது. சம்பவம் நடந்தது இன்னைக்கு. இந்த ரெண்டு நாள்ல அந்த திருட்டுக் கும்பல் பொது மக்களோட கலந்து சாதாரணமா வந்து அந்த கிரீடத்தையும், பாதுகாப்பு அமைப்புகளையும் நோட்டம் விட்டுட்டுப் போயிருக்கணும்னு நான் சந்தேகப்படறேன். அதனால பொது மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டதிலேர்ந்து கேஸட்ல பதிவான ஒவ்வொருத்தரையுமே கம்ப்யூட்டரை வெச்சு அனலைஸ் பண்ணச் சொல்லலாம். ஸ்ரீராமுடு ரெட்டியார் வேஷம் யாருக்குப் பொருந்துதுன்னு கம்ப்யூட்டர்ல, ப்ரோக்ராம் பண்ணி விசாரிக்கலாம். நாமும் ஒரு தடவைப் பார்க்கலாம். வெறும் பார்வைக்கே பிடிபடலாம்."

"வெரிகுட் ஐடியா, பரத். நான் உடனே ஏற்பாடு பண்றேன். கமிஷனர் ஆபீசுக்கு நீங்களும் வர்றீங்களா?" உதவியா இருக்கும்."

"நிச்சயமா வர்றேன். ஏற்பாடு பண்ணிட்டுக் கூப்பிடுங்க" என்று விட்டு போனை வைத்தான் பரத்.

"நான் முகம் கழுவிட்டு வந்துடறேன் பரத்" என்ற சுசிலா அந்த அலுவலக அறையை ஒட்டி இருந்த டாய்லெட் அறைக்குள் செல்வதற்காகக் காத்திருந்தது போல போன் ஒலித்தது. எடுத்தால்,

"ஹலோ, நான் வயோலா பேசறேன்" என்றாள்.

"இப்பதான் உங்களைப் பத்தி நினைச்சேங்க வயோலா. உங்களுக்கு போன் செஞ்சி இப்போ பீச்சுக்கு வந்து சந்திக்க முடியாதுன்னு சொல்ல நினைச்சேன். ஆனா உங்க போன் நம்பர் தெரியாது. எப்படி தகவல் சொல்றதுன்னு புரியாம முழிச்சிட்டிருந்தேன்."

"எனக்கு வேற ஒரு ப்ரோக்ராம் இருக்குது. நீங்க



கண்டிப்பா என்னை மீட் பண்ண பீச்சுக்கு வர்றதா இருந்தா நான் அதைக் கேன்சல் பண்ணிடலாம்னுதான் போன் செஞ்சேன்."

"நல்ல வேளை, கேன்சல் பண்ணாதிங்க. அந்த ப்ரோக்ராமைப் பாருங்க."

"ரொம்ப முக்கியமான வேலையா?"

"ஆமாம். இன்னைக்கு ஈவ்னிங் பேப்பர் பார்த்திங்களா? காலைல ஆனந்தி ஜூவல்லரிலேர்ந்து மூணு கோடி ரூபா வைர கிரீடத்தை சாமர்த்தியமா அடிச்சிட்டுப் போயிட்டது பத்தி படிச்சிங்களா?"

"ஆமாம், படிச்சேன்."

"அப்போ அங்கே நாங்களும் இருந்தோம். ஜஸ்ட் மிஸ் பண்ணியாச்சு. அந்த வைர கிரீடத்தை மீட்டு அவங்களைப் பிடிக்கிறதில போலீசுக்கு உதவியா ஏதாச்சும் செய்யலாம்னு ஒரு ஆர்வம். அது சம்பந்தமா இப்போ கமிஷனர் ஆபீசுக்குப் போக வேண்டியிருக்குது. அதான் வர முடியாமப் போகுது."

"பரவால்லை. இன்னும் என்னை நினைவுக்கு வரலையா?"

"அதுதாங்க இப்ப எனக்குப் பெரிய தலைவலியா இருக்கு. நானும் ரெண்டு நிமிஷத்துக்கொரு தடவை முக்கி முக்கி யோசிக்கிறேன். ம்கூம். நீங்க வேற கிளுகிளுப்பா ஒரு க்ளு கொடுத்துட்டிங்க."

"கிளு கிளுப்பான க்ளுவா?"

"பின்னே இல்லையா? பொது இடத்துக்குப் போட்டுட்டு வர முடியாத டிரெஸ்ல உங்களை நான் சந்திச்சதா சொன்னிங்களே... என்னை மண்டையைப் பிச்சிக்க வைக்கிறதில உங்களுக்கு அப்படியென்ன சந்தோஷம்? பேரைச் சொல்லிட்ட மாதிரி இந்த சஸ்பென்ஸையும் உடைச்சிடக்கூடாதா?"

"இன்னொரு க்ளு வேணும்னா தர்றேன்."

"சொல்லுங்க."

"என்னைச் சந்திக்கிறதுக்காக நீங்க எண்பது ரூபா செலவு செஞ்சிங்க பரத். இப்ப ஞாபகம் வரணுமே."

"இன்னும் குழப்பம் அதிகமாயிருக்கு. சரி, வயோலா, நாம எப்படி சந்திச்சிருந்தாலும் சரி, இப்போ இப்படி போன் செய்யறிங்க. நேர்ல சந்திக்கணும்னு சொல்றிங்க. இதுக்கெல்லாம் என்னங்க காரணம்?"

"எனக்கு உங்களை பிடிச்சிருக்கு. உங்களோட பேச பிடிச்சிருக்கு."

"அங்கேதாங்க வில்லங்கம் ஸ்டார்ட் ஆகுது. நான் தெரிஞ்சோ தெரியாமலோ சுசிலாவை லவ் பண்ணிட்டி ருக்கேன். அதனால மறுபடி லவ் பண்றது முடியாதுங்க, ஆரம்பத்திலேயே சொல்லிடணும் பாருங்க."

"பரத், நீங்க என்னை லவ் பண்ண வேணாம். ஜஸ்ட் கம்பெனி கொடுக்கக் கூடாதா? நாளைக்கு ஈவினிங் மீட் பண்ணலாம். அப்போ விரிவா பேசலாம்."

"சரிங்க, கம்பெனி கொடுக்கறதுன்னா, அந்த லிஸ்ட்ல என்னென்ன அயிட்டமெல்லாம் வருங்க வயோலா?"

"போன்ல சொல்ல முடியாத அயிட்டங்கள்! வெச்சிடவா?" எச்சில் முழுங்கி விட்டு போனை வைத்தான் பரத்.

○

**"போ**துமே கிரண், அஞ்சாவது பெக் முடிஞ்சி எதுக்கு மறுபடி பாட்டில் எடுக்கறிங்க?" என்றாள் அவள்.

அந்த ஹோட்டல் அறையில் ஒரு சின்ன லைட் மட்டும் போட்டுக் கொண்டு அவர்கள் கட்டிலில் அமர்ந்திருந் தார்கள். நேரம் இரவு 9.40.

நல்ல போதையில் இருந்த கிரண், "இந்த பாரு! இன் னைக்கு நான் எக்கச்சக்கமான சந்தோஷத்தில இருக்கேன். அதனால கீழே விழற வரைக்கும் குடிக்கப் போறேன்."

"குடிச்சுட்டு விழுந்துடறதா இருந்தா நான் எதுக்காம்?" என்றவள் உடம்பில் உள்ளாடைகள் மட்டுமே இருந்தன.

"டோண்ட் வொர்ரி பேபி. அதுக்கப்புறம்தான் விழு வேன். நீ கொஞ்சம் குடிக்கிறியா?"

"வேணாம். ஆமாம். அப்படி என்ன பெரிய சந்தோஷம் கிரண்?"

"இருபத்தஞ்சை மூணால வகுத்தா என்ன வரும்? கணக்குப் போட்டுச் சொல்லு, பார்க்கலாம்."

"அதெல்லாம் கால்குலேட்டர்லதான் வகுக்க முடியும்.."

"ஒரே ப்ராஜெக்ட்ல கிட்டத்தட்ட எட்டரைக் கோடி சம்பாரிச்சிருக் கேன். பின்னே சந்தோஷம் இருக்காதா?"

"குடிச்சிட்டு உளர்றிங்களா? எட்டரைக் கோடி நீங்க சம்பாதிச்சிங்களா?"

"ஆமாம் டார்லிங்."

"உங்களோட இத்தனை நாளா பழகறேனே ஒழிய, உங்களுக்கு என்ன பிஸ்னெஸ் கிரண்? அவ்வளவு லாபம் தர்ற பிஸ்னெஸ் என்னன்னு தெரிஞ்சுக்கணும்னு ஆர்வமா இருக்கு" என்றாள் அவள்.

"எடுக்கறது! விக்கிறது! அந்த பிஸ்னெஸ்."



"வாங்கறது, விக்கிறதுன்னு கேள்விப்பட்டிருக்கேன். அதென்ன எடுக்கறது?"

"நீ சின்னப் பொண்ணு. உனக்குப் புரியாது. விட்டுடு. என் வாழ்க்கைல இவ்வளவு பெரிய லாபம் பார்த்ததில்லை. எல்லாம் அந்த மண்டல தேவி கடாட்சம்!" என்ற கிரண், அவள் கையில் வைத்திருந்த சிகரெட்டை வாங்கினான். "கிளாசையே கவனிச்சா எப்படி? கொஞ்சம் உன்னையும் கவனிக்கலாம்" என்றான்.

அவள் ஏதோ யோசனையுடன் கூந்தலில் இருந்து ரிப்பனை சாதாரணமாக அவிழ்ப்பது போலத் தன் உடம் பிலிருந்து மிச்ச ஆடைகளை விலக்கித் தயாரானாள்.

கிரண் அவள் மூலமாக வானத்தில் நட்சத்திரங்களைக் கிள்ளிப் பார்த்து விட்டு, மேகங்களை வாயால் ஊதிக் கலைத்து விட்டு சாட்டிலைட்டுகளை ஃபுட்பால்போல உதைத்துக் கடாசி விட்டு மீண்டும் பூமிக்குத் திரும் பியதும் சிகரெட் தேவைப்பட்டது.

அந்த சமயம் பார்த்து போன் ஒலித்தது. எடுத்தான்.

"ஹலோ, நான் சுலைமான் சேட் பேசறேன்" என்றது ஹிந்திக்குரல்.

"சொல்லுங்க" என்றான் ஹிந்தியில்.

"நான் நாளைக்கு ஃப்ளைட் நம்பர் I.C. 594 ல புறப்பட்டு வர்றேன்."

"அந்த ஃபிளைட் மெட்ராசுக்கு எத்தனை மணிக்கு வந்து சேரும்?"

"ராத்திரி எட்டு நாப்பத்தஞ்சி"

"ஒரு நிமிஷம் இருங்க" என்று கிரண் அருகிலிருந்த மேஜையில் பேனா எடுத்து நியூஸ் பேப்பரின் ஒரு வெள்ளைப் பகுதியில் 'I.C.594 8.45 P.M'. என்று எழுதினான். "ஒக்கே யாராவது நாங்க வந்து பிக்கப் பண்ணணுமா?"

"வேணாம். நீங்க சொன்ன இடத்துக்கு சொன்ன நேரத் துக்கு கரெக்ட்டா நான் வந்துடுவேன். சரக்கு பத்திரமா இருக்கா?"

"ரொம்ப பத்திரமா இருக்கு" என்று போனை வைத்தான்.

படுக்கையிலிருந்து எழுந்து கேஷுவலாக உடைகளை
அணிந்து கொள்ளத் துவங்கிய அவளுக்கு சிந்தனை
யோட்டம் தீவிரமானது. அவளுக்கு ஹிந்தி தெரியும். இரவு
நேரம், அமைதி, அதனால் எதிர் முனையில் பேசியவன்
பேசியதும் தெளிவாகக் கேட்டது. 'சரக்கு! சொன்ன நேரம்!
சொன்ன இடம்! எட்டரைக் கோடி ரூபாய் லாபம்! - எடுப்
பது, விற்பது என்றது, மண்டல தேவி கடாட்சம் என்றது' -

இவை எல்லாமுமாகச் சேர்ந்து அவளுக்கு எதையோ புரிய வைத்தது.

அவள் அன்றைய தினம் மாலை செய்தித்தாள் படித்திருந்தாள். அதில் மண்டலதேவிக்கு செய்யப்பட்ட வைரக் கிரீடம் கொள்ளையடிக்கப்பட்ட விவரங்களைப் படித்திருந்தாள். அதன் மதிப்பு முப்பது கோடி. அதில் சம்பந்தப்பட்டது மூன்று பேர்!

இந்தக் கிரண் அந்த மூன்று பேரில் ஒருவனா? ஏதோ எக்ஸ்போர்ட் பிஸ்னெஸோ என்னவோ செய்கிறான் என்று நினைத்துக் கொண்டிருந்த இந்த ஆள் கொள்ளைக் காரனா?

இவன் எப்படியோப் போகட்டும்! நான் நம்பிக்கையோடு வணங்கும் மண்டல தேவியின் சொத்தை அபகரிப்பதா? மண்டலதேவியின் தீவிர பக்தையான நான் அதை அறிந்தும் சும்மாயிருப்பதா? கூடாது.

"நான் புறப்படட்டுமா கிரண்? மணி பத்தரை. ரொம்ப லேட்டா புறப்பட்டா எனக்கு ஆட்டோ கிடைக்காது."

"தங்கிட்டு காலைல போயேன்."

"இல்லை. நான் போகணும். எனக்கு வேலை இருக்கு."

"இரு வர்றேன்" கிரண் லேசாகத் தள்ளாடியபடியே டாய்லெட் அறைக்குள் செல்ல, அந்த நேரத்தில் அவள் கிரண் எழுதிய விபரப் பகுதியை மட்டும் செய்தித் தாளில் இருந்து கிழித்தெடுத்து அவசரமாகத் தன் கைப்பையில் வைத்துக் கொண்டாள்.

டாய்லெட் அறையிலிருந்து வந்த கிரண் ஸ்டாண்டில் மாட்டியிருந்த தன் சட்டையை அடுத்து அதிலிருந்து மணி பர்ஸ் எடுத்த போது, ஒரு ஒரு ரூபாய் நாணயம் தவறி கீழே விழுந்து உருண்டு அவள் காலடியில் வந்து நின்றது.

குனிந்து எடுத்துக் கொண்ட அவள், 'இதை நான் வெச்சுக்கறேன். போன் செய்யத் தேடறப்போ, ஒரு ரூபா காசு கிடைக்கிறதில்லை" என்றாள்.

கிரண் மணிபர்சில் இருந்து இரண்டு ஐநூறு ரூபாய் தாள்கள் எடுத்துக் கொடுத்து, கன்னத்தில் தட்டி, "அடுத்த தடவை உனக்கு ஒரு வைர மோதிரம் செஞ்சித் தர்றேன் டார்லிங்" என்றான்.

"நான் வர்றேன் கிரண்."

அவள் புறப்பட்டாள். நடந்தாள். லிஃப்டில் கீழே வந்தாள். நடந்தாள். தெருவுக்கு வந்தாள். நடந்தாள். காசு போட்டுப் பேசுகிற ஒரு பொது தொலைபேசி தூரத்தில் இருப்பதைப் பார்த்தாள். நடந்தாள்.



ரிசீவரை எடுத்து எண்கள் சுழற்றினாள்.

எதிர் முனை எடுக்கப்பட்டு, "ஹலோ, பரத் ஸ்பீக்கிங்" என்றதுமே, ஒரு ரூபாய் காசைப் போட்டு விட்டு,

"ஹலோ, நான் வயோலா பேசறேன். பரத்" என்றாள் அவளாகிய வயோலா.

"நீங்க மறுபடி கொடுத்த க்ளூவை வெச்சும் யோசிச்சுப் பார்த்துட்டேங்க. இன்னும் உங்களை சந்திச்சது ஞாபகத் துக்கு வரலைங்க வயேலா. அது சரி என்ன இது. ராத்திரி பத்தரைக்குக் கூட பேச ஆரம்பிச்சிட்டிங்க?"

"பரத், நான் ஒரு பப்ளிக் பூத்லேர்ந்து ரொம்ப அவசரமா ஒரு முக்கியமான தகவல் உங்களுக்குச் சொல்றதுக்காகக் கூப்புடறேன். அந்த வைர கிரீடம் கொள்ளயடிக்கப் பட்டதை நீங்க கண்டுபிடிக்க முயற்சி பண்றிங்க இல்லையா? எனக்கு ஒருத்தர் மேல ரொம்ப சந்தேகமா இருக்கு. நாம உடனே சந்திச்சா நான் எல்லாத்தையும் விவரமா சொல்றேன்."

"யாரு அந்தாளு?"

"என் கஸ்டமர். அய்யோ! நேர்ல பேசலாமே..."

"சரி, நீங்க எங்கேர்ந்து பேசறீங்க வயோலா? இடத்தைச் சொல்லுங்க. நான் உடனே புறப்..."

பரத்தின் குரல் பாதியில் கட்டாக, நிமிர்ந்து பார்த்தால், கிரண் புன்னகையோடு தொடர்பை துண்டித்து விட்டு நின்றிருந்தான்.

"நினைச்சேன்! என்ன்டா இது அவசரமா புறப்படறாளே, அதிலயும் இந்த ராத்திரில முக்கியமான வேலை இருக் குன்னு சொல்லிட்டுப் புறப்படறாளே. அதிலயும் போன் செய்யறதுக்கு என்கிட்டேயே ஒரு ரூபா காசு எடுத்துக் கிட்டுப் புறப்படறாளேன்னு நினைச்சு உடனே ஃபாலோ செஞ்சேன் கண்ணு. நான் எவ்வளவு போதையில இருந் தாலும் புத்தி மட்டும் மழுங்கறதே இல்லைடி பாரு! இந்த அழகான உடம்பை எத்தனை தடவை என் ரெண்டு கையா லும் தொட்டிருக்கேன். இப்போ கத்தியால தொட வேண்டி யிருக்கு."

கிரண் தன் பேண்ட் பாக்கெட்டிலிருந்து பட்டன் கத்தி எடுத்து விரித்து...

வயோலா "நோ! ப்ளீஸ்..." என்று பதற, கெஞ்ச...

தினத்திந்தி பாஷையில் சதக். சதக் என்று குத்தி விட்டான்.

நகம் கடித்தபடி பதட்டமாக காத்திருந்த பரத்திற்கு போலீஸ் கண்ட்ரோல் ரூமிலிருந்து போன் வந்த போது மணி 11.45.

"சார், நீங்க சொன்னது சரி. நீங்க சொன்னதும் மெட்ராஸ் சிடில இருக்கிற எல்லா பப்ளிக் பூத்தையும் பேட்ரோலிங் வேன்களுக்கு தகவல் சொல்லிப் பார்க்கச் சொன்னதில பெஸண்ட் நகர்ல ஒரு பப்ளிக் பூத்தில ஒரு பெண்ணோட டெட்பாடி கிடக்குது. கத்தில குத்தப்பட்டிருக்காங்க. டி.ஐ.ஜி. சுவாமிநாதன் வந்திருக்கிறார் ஸ்பாட்டுக்கு. இன்ஸ்பெக்டர் நியூட்டன் உங்களுக்குத் தகவல் கொடுக்கச் சொன்னார்.''

"பெஸண்ட் நகர்ல அந்த பூத் எந்த இடத்தில இருக்கு? சொல்லுங்க. நான் புறப்பட்டு வர்றேன்."

சொல்லப்பட்ட இடக் குறிப்பை மனதில் வாங்கிக் கொண்ட பரத், அருகிலிருந்த சுசிலாவிடம், "வா சுசி, போகலாம். கொலை செய்யப்பட்டிருக்கிறது அந்த பொண்ணு வயோலாவாத்தான் இருக்கணும். பாவம்! அவ யாரு, என்ன தொழில், அவ எப்படி கிரீடம் திருட்டு மேட்டர்ல ஒருத்தனை சந்தேகப்பட்டா? எதுவும் புரியலை" என்றான்.

"ஒன்று நிச்சயம் பரத். கொல்லப்பட்டது வயோலாவா இருந்தா, கொலை செஞ்சது கிரீடத்தைக் கொள்ளையடிச்ச அந்த மூணு பேர்ல ஒருத்தன்தான்."

இருவரும் புறப்பட்டு பெஸண்ட் நகரில் குறிப்பிட்ட அந்த டெலிபோன் பூத்துக்கு வந்து சேர்ந்த போது டி.ஐ.ஜி. இப்போதுதான் புறப்பட்டுப் போனதாக இன்ஸ்பெக்டர் நியூட்டன் தெரிவித்தார்.

டெலிபோன் பூத் உள்ளே சரிந்து ரத்தத்திற்கு நடுவில் கிடந்தவள் வயோலாதான் என்று தெரிந்ததும் பரத்திற்கு துக்கமாக இருந்தது.

ஆம்புலன்சிற்காக காத்திருப்பதாக கொட்டாவிக்கு நடுவில் சொன்ன நியூட்டனிடம், "யாருன்னு விவரம் தெரிஞ்சதா?"

"ஹேண்ட் பேக்ல விசிட்டிங் கார்டு வெச்சிருந்தா பரத். இவ பேரு வயோலா. மந்தைவெளில பரணி அபார்ட்மெண்ட்ஸ்ல ஒரு அட்ரஸ். போன் கூட இருக்கு. போன் செஞ்சோம். இவ வீட்ல இருந்த இவளோட சித்தி பேசினாங்க. வரவழைச்சோம். அதோ அழுதுட்டு இருக்காங்க பாருங்க" என்று சற்றுத் தள்ளி போலீஸ் ஜீப்பில் சாய்ந்து நின்று அழுதபடி இருந்த பெண்ணைக் காட்டினார்.

"விசாரிச்சிங்களா?"



"எங்கே? இப்பதான் கொஞ்சம் அழுகை கண்ட்ரோல் ஆகியிருக்கு. வாங்க, விசாரிக்கலாம். ஆமாம். இந்த வயோலா உங்களுக்கு போன்ல என்ன சொன்னா? ஏற்கனவே அறிமுகம் உண்டா பரத்?"

"சொல்றேன் சார். முதல்ல வயோலாவோட சித்தி என்ன சொல்றாங்கன்னு தெரிஞ்சுக்கலாம்" என்றான் பரத்.

அவர்கள் அந்த விசும்பும் பெண்ணிடம் வந்தார்கள்.

"இதோ பாருங்கம்மா. நீங்க வாய் திறந்து கொஞ்சமாவது பேசினாதான் மேற்கொண்டு நாங்க செயல்பட முடியும். இந்தப் பொண்ணு வயோலா யாரு, எங்கப் போயிருந்தா, யாரோட என்ன பகை, யாரு இவளை இப்படி கொலை செய்திருக்கலாம்? இதுக்கெல்லாம் உங்க பதில்கள் வேணும், கொஞ்சம் ஆசுவாசப்படுத்திக்கிட்டுப் பேசுங்க."

அந்தச் சித்தி முழுக்க நனைந்து இனி இஞ்ச் இடம் பாக்கியில்லாத கர்சீப்பில் மூக்கு துடைத்து இடுப்பில் செருகிக் கொண்டு, "சார், வயோலா ஒரு டான்ஸர் சார்." என்றாள்.

''பரத நாட்டியமா?"

"இல்லை. காபரே."

பரத்திற்குள் ஆயிரம் வாட் பல்ப் எரிந்து சகலமும் சுத்தமாகப் புரிந்தது. ஆறு மாதம் முன்பாக ஒரு பழைய நண்பனைப் பார்க்கப் போய், அவன் வலுக்கட்டாயமாக ஒரு காபரே ஷோவுக்குக் கூட்டிப் போனதும், அங்கே ஆடிய பெண்களில் வயோலா பிரமாதமாக, செக்ஸியாக ஆடியதும் நினைவுக்கு வந்தது.

அந்த பணக்கார நண்பன் வயோலா கிட்டே வந்த போதெல்லாம் புது ஐந்து ரூபாய் கட்டைப் பிரித்து வைத்துக் கொண்டு கொஞ்சம் கிள்ளி அவளுக்கு பணத்தால் அபிஷேகம் செய்தபடி இருந்ததும் நினைவு வந்தது.

அதனால்தான் வயோலா 'உங்க அஞ்சு ரூபா ஃபிரெண்டு நல்லா இருக்காரா?' என்று விசாரித்தாள். 'பொது இடத்திற்குப் போட்டுக் கொண்டு வர முடியாத டிரெஸ்' என்றாள். கடைசியாக 'எண்பது ரூபாய் செலவு செய்து வந்துப் பார்த்தீர்கள்' என்றாள்.

சித்தி மேலும் தொடர்ந்தாள். "சார், காபரே ஆடற பொண்ணு வாழ்க்கையை எப்படி ஓட்ட முடியும்னு உங்களுக்கேத் தெரியும். அப்பப்போ சில பணக்கார கஸ்டமர்ஸ் போன் செஞ்சிக் கூப்பிடுவாங்க. போய்ட்டு வருவா. இன்னைக்கும் ஒரு கஸ்டமர் போன் வந்தது. ஈவினிங் நீட்டா டிரெஸ் பண்ணிட்டு முடிஞ்சா நைட் திரும்பிடுவேன். இல்லைன்னா காலைலதான் வருவேன்னு சொல்லிட்டுப்

போனா. மத்தபடி அவளுக்கு கொலை செய்யப்படற அளவு பகை எதுவும் இல்லை."

பரத் நியூட்டனைத் தனியாக அழைத்து வந்தான்.

''சார், கிரீடம் திருட்டுல தான் ஒருத்தனை ஸ்ட்ராங்கா சந்தேகப்படறதா வயோலா என்கிட்டே போன்ல சொன்னா, நேர்ல வந்தா விபரமாச் சொல்றேன்னா. அவசரமா ஒரு பப்ளிக் பூத்லேர்ந்து பேசறதாச் சொன்னா. திடீர்னு போன் அப்ரப்ட்டா கட் ஆயிடுச்சு. மறுபடி அவளேக் கூப்பிடுவான்னு வெய்ட் செஞ்சேன். போன் வரலை. அதனால சந்தேகப்பட்டுதான் பப்ளிக் பூத்ல எல்லாம் பார்க்கச் சொல்லி கண்ட்ரோல் ரூமுக்குத் தகவல் கொடுத்தேன்" என்றான் பரத்.

"பரத், இது அந்தப் பொண்ணோட ஹேண்ட் பேகுக்குள்ளே இருந்தது. பாருங்க" என்று நியூட்டன் செய்தித்தாளில் இருந்து கிழிக்கப்பட்ட ஓரப் பகுதி துண்டுக் காகிதத்தை எடுத்துக் காட்டினார்.

வாய் விட்டுப் படித்தாள் சுசிலா. "ஐ.சி.594, 8.45 பி.எம்."

"இது பாம்பே பிளைட் சார். எய்ட் ஃபார்ட்டி பைவ்ங்கிறது அரைவல் டைம். இது வாரத்தில ரெண்டே நாள் தான். புதனும், ஞாயிறும். நான் வந்திருக்கேன் இதில" என்றான் பரத்.

"நாளைக்கு ஞாயிறு" என்றார் நியூட்டன்.

"இதை இவ ஏன் எடுத்து வெச்சிருக்கா? கொஞ்சம் கொடுங்க அதை." கையில் வாங்கிப் பார்த்த பரத், "சார், இது ஹிண்டு பேப்பர்ல கிழிக்கப்பட்டது. இன்னைக்கு தேதி தெரியுது பாருங்க. இன்னைக்கு ஹிண்டு பேப்பர்ல இருந்து கிழிக்கப் பட்டது. இது வயோலாவோட கையெழுத்துதானான்னு முதல்ல தெரிஞ்சுக்கலாம். அம்மா, கொஞ்சம் இப்படி வாங்க" என்று அந்த சித்தியை அழைத்தார்.

வந்ததும் சீட்டைக் காட்டி, "இது வயோலாவோட கையெழுத்தான்னு பாருங்கம்மா."

அவள் பார்த்து விட்டு, "இல்லைங்க. அவ நம்பர் எழுதற ஸ்டைலே வேற. நிச்சயமா இது அவ கையெழுத்தே இல்லை."

"சரி, உங்க வீட்ல ஹிண்டு வாங்கறிங்களா?"

"இல்லை சார்."

"இன்னைக்குக் காலையிலேர்ந்து வயோலா எங்கெங்கே போனான்னு சொல்லுங்களேன்."



"எங்கேயும் போகலை சார். அவளுக்கு சனி, ஞாயிறு டான்ஸ் கிடையாது. பகல்ல வீட்லதான் இருப்பா. ஈவினிங் போன் வந்ததும் புறப்பட்டுப் போனா."

''எங்கேர்ந்து போன் வந்ததுன்னு உங்கக்கிட்டே சொல்லலையா?"

"ஒரு கஸ்டமர் போன் செய்றார். போய்ட்டு வந்துடறேன்னு மட்டும் சொன்னா."

"கஸ்டமர்னா வீட்லேர்ந்து பேசிருப்பாரா? உங்களால ஏதாச்சும் யூகம் பண்ண முடியுமா?"

"பெரிய ஹோட்டல்சுல ரூம் போட்டுட்டுதான் கூப்புடுவாங்க சார். வீட்டுக்குக் கூப்புடறது அபூர்வம்."

பரத் உடனே சுற்றிலும் பார்வையை ஓட்டினான்.

சற்றுத் தள்ளி ஸ்கை ஸ்டார் என்கிற அந்த நட்சத்திர ஹோட்டல் இருந்தது.

"நியூட்டன், நான் ஒரு யூகம் சொல்றேன். சரியான்னு பாருங்க. கிரீடம் கொள்ளையடிச்ச மூணு பேர்ல ஒருத்தனோ இல்லை மூணு பேருமோ இந்த ஸ்கை ஸ்டார் ஹோட்டல்ல தங்கியிருக்கலாம். அந்த ஒருத்தன வயோலாவோட கஸ்டமர். போன் செஞ்சி வயோலாவைக் கூப்பிட்டிருக்கான். இவளும் புறப்பட்டு வந்திருக்கா. அந்தச் சந்தர்ப்பத்தில அந்த கஸ்டமர் கிரீடம் பற்றி ஏதாச்சும் உளறிக் கொட்டிருக்கலாம். இல்லைன்னா இவளே கிரீடத்தை கண்ணால பார்த்திருக்கலாம். ஈவினிங் நானும் வயோலாவும் மீட் பண்றதா இருந்தோம். வயோலாவே போன் செஞ்சி எனக்கொரு ப்ரோக்ராம் இருக்கு. கேன்சல் பண்ணிட்டு வரவான்னு கேட்டா. நான் வேணாம்னு சொன்னேன். அப்போ கிரீடம் திருட்டு பத்தி சொல்லி அது சம்பந்தமா கமிஷனர் ஆபீஸ் போறேன்னு நான் சொன்னேன். அதனால அவ தன் சந்தேகத்தை எனக்கு சொல்றதுக்காக போன் செஞ்சிருக்கா. ஆனா அவ சந்தேகப்பட்டுட்டதை அவன் உணர்ந்திருக்கணும். அதனால அவளைத் தொடர்ந்து வந்து குத்திட்டான்."

"எல்லாமே கரெக்ட்டா இருக்கு பரத். இந்தச் சீட்டு..." என்றார் நியூட்டன்.

"நான் சொல்றேன்" என்றாள் சுசிலா. "இவ அந்த கஸ்டமரோட இருந்தப்போ நாளைக்கு யாரோ ஒரு பார்ட்டி பாம்பேலேர்ந்து வர்ற விபரம் போன்ல தகவலா வந்திருக்கணும். அந்த எக்ஸ் அவசரத்துக்கு தகவலை நியூஸ் பேப்பர் ஓரத்தில குறிச்சிட்டிருக்கணும். வயோலா எங்ககிட்ட ஒப்படைக்கிறதுக்காக அதை ரகசியமா கிழிச்சி

எடுத்துக்கிட்டு வந்திருக்கணும்."

"யு ஆர் ரைட் சார். வாங்க. பக்கத்தில இருக்கிற பெரிய ஹோட்டல் இதான். வாங்க போய் ரிசப்ஷன்ல விசாரிக்கலாம்" என்றான் பரத்.

○

**ஹோ**ட்டல் ஸ்கை ஸ்டாரில் இரவு நேர ரிஸப்ஷனிஸ்ட்டாக இருந்த ஆணிடம் 'ஸ்ரீராமுடு ரெட்டியார்' வேடத்தில் இருந்த ராவின் புகைப்படத்தைக் காட்டினார் நியூட்டன்.

"நல்லா பொறுமையாப் பாத்துச் சொல்லுங்க மிஸ்டர். இந்த ஆள் உங்க ஹோட்டல்ல தங்கியிருக்கானா? இந்த தாடி ஒட்டுதாடி. தாடி இல்லாம கற்பனை செஞ்சிப் பார்த்துச் சொல்லுங்க."

அவன் போட்டோவை இப்படிப் பிடித்துப் பார்த்து, அப்படிப் பிடித்துப் பார்த்து குழம்பிப் போய், "சார், தப்பா நினைக்காதிங்க. இந்த ஹோட்டல்ல எண்பத்தி எட்டு ரூம்ஸ் இருக்கு. நான் இங்கே இருபத்தி நாலு மணி நேரம் டூட்டி பார்க்கிறவன் இல்லை. இவன் இதே அடையாளத்தில இந்த ஹோட்டல்ல வேற யாராச்சும் டூட்டில இருந்தப்போ ரூம்போட்டு தங்கியிருந்தாக் கூட எனக்குத் தெரியாது."

பரத் சொன்னான். "இவர் சொல்றது ரொம்ப நியாயம். இன்னொரு வழி இருக்கு. ஏன் சார், உங்க ஹோட்டல்ல எல்லா ரூம்லயும் என்ன நியூஸ் பேப்பர் போடுவிங்க?"

"ஹிண்டு" என்றான் அவன்.

"ஒண்ணு செய்யலாம். ஒவ்வொரு ரூமுக்காப் போய் கதவு தட்டி இன்னைக்குப் போடப்பட்ட ஹிண்டு கேக்கறது. எந்த பேப்பர்ல ஓரம் கிழிஞ்சிருக்கோ அந்த ரூம்ல இருக்கிறவன் தான் கொள்ளையில் சம்பந்தப்பட்டவன்" என்றான் பரத்.

"இந்த நேரத்திலயா?" என்றார் நியூட்டன்.

"வேற வழியில்லை. சில சமயம் இந்த மாதிரி அன்டைத்தில நீங்க ஹோட்டல்ல ரெய்டு போறதில்லையா? அந்த மாதிரி தான். வேற எப்படி அவனைப் பிடிக்கிறது?"

"ஓக்கே. எங்களுக்கு வேற வழியில்லை. நீங்க ஒத்துழைங்க" என்றார் நியூட்டன்.

கொஞ்ச நேரத்திற்குப் பிறகு அவர்கள் ஒவ்வொரு அறைக்கும் சென்று உள்ளே இருந்தவர்களை டிஸ்டர்ப் செய்து, பணிவாக ஸாரி சொல்லி ஹிண்டு பேப்பர் வாங்கிப் பார்க்கத் துவங்கினார்கள்.



மூன்றாவது மாடிக்கு வந்தார்கள். அறை எண் 305, 306 முடித்து, கிரண் தங்கியிருந்த 307ம் நம்பர் அறைக்கு வந்தார்கள்.

"சார், இந்த ரூம்ல தங்கியிருக்கிறவர் வெளிய போயிருக்கார். சாவி ரிசப்ஷன்ல இருக்கு. பத்தரை மணிக்கு மேல புறப்பட்டு வெளில போனார்" என்றான் ரிசப்ஷனிஸ்ட்.

"அவர் பேர் என்ன?"

"பாண்டியன். பத்து நாளா தங்கியிருக்கார் சார்."

"அந்த சாவியை எடுத்துட்டு வாங்க" என்றான் பரத்.

சாவி கொண்டு வரப்பட்டது.

307ம் நம்பர் அறை திறக்கப்பட்டது. உள்ளே வந்தார்கள். சுசிலா டீப்பாய் மேல் கிடந்த ஹிண்டு பேப்பரைப் புரட்டி, "பரத், இதோ பாருங்க! ஓரம் கிழிஞ்சிருக்கு" என்றாள் உற்சாகமாக.

அந்தத் துண்டுக் காகிதத்தை அந்த இடத்தில் பொருத்திப் பார்க்க, சரியாகப் பொருந்தியது.

"இந்த ரூம்தான். இங்கேதான் வயோலா வந்திருக்கா. இந்த பாண்டியன் தான் அவளை வரவழைச்சவன். இந்த பாண்டியன்தான் கொள்ளையில் ஈடுபட்டவன். இந்த பாண்டியன்தான் அவளைக் கொலையும் செஞ்சவன். இவன் என்ன அட்ரஸ் கொடுத்திருக்கான்னு கீழேப் போய் பாருங்க. சார், நான் இங்கே இருக்கிற அவனோட சாமான்களை சோதனை போட்டுப் பார்க்கறேன்" என்றான் பரத்.

ரிசப்ஷனிஸ்டும், நியூட்டனும் புறப்பட்டுச் சென்றார்கள். அங்கு இருந்த இரண்டு சூட்கேஸ்களைத் திறந்து சோதனை செய்தான் பரத். பேண்ட், சட்டைகளைத் தவிர வேற எதுவும் கிடைக்கவில்லை. கோட் ஸ்டாண்டில் தொங்கின சட்டையின் பாக்கெட்டுகளிலும் எதுவும் இல்லை. கப்போர்டில், ட்ரெஸ்சிங் டேபிளில், மேஜையில், அதன் டிராயரில் என்று பொறுமையாகத் தேடியும் அந்தப் பாண்டியன் பற்றி எந்தத் தகவலும் கிடைக்கவில்லை.

கீழே இறங்கி வந்தார்கள்.

"பெங்களூர் அட்ரஸ் கொடுத்திருக்கான் பரத். பெங்களூர் போலீசுக்கு தகவல் தந்திருக்கேன். இந்த அட்ரஸ்ல விசாரிக்கச் சொல்லிருக்கேன். இப்போ என்ன செய்யலாம்?"

"எதிர்பாராத விதமா ஒரு கொலையை செய்ய நேர்ந்துட்டதால இந்த பாண்டியன் ரூமை விட்டுப் புறப்பட்டுப் போயிருக்கணும். ரூமை காலி செய்ய நேரம் இல்லாம அவசரமா எல்லாத்தையும் அப்படியே விட்டுட்டுப்

புறப்பட்டுப் போயிருக்கணும். மறுபடி அவன் திரும்பி இதே ரூமுக்கு வருவானாங்கிறது சந்தேகம். எதுக்கும் ஒரு மஃப்டி போலீசை உள்ளே மறைஞ்சிருக்கச் செய்யலாம்." என்ற பரத் ரிசப்ஷனிஸ்ட் பக்கம் திரும்பி, "இந்த பாண்டியன் இன்னைக்கு பூரா எந்த எந்த நம்பருக்கு போன் பேசினான்னு தகவல் இருக்குமே உங்ககிட்ட?"

"லோக்கல் காலுன்னா தகவல் இருக்காது. டைரக்ட் லைன் கொடுத்திருக்கோம். எஸ்.டி.டி.ன்னா மட்டும் எங்க போர்டுல சொல்லி, நாங்க நம்பர் வாங்கித் தருவோம்" என்று அவன் ஏதோ சட்டென்று நினைவு வந்தவனாக நெற்றியில் தட்டிக் கொண்டு, "சார், இந்த பாண்டியன் இன்னைக்கு ஈவினிங் பாம்பேக்கு எஸ்.டி.டி.பேசணும்னு சொன்னார். அப்போ இங்கே கொஞ்சம் ரிப்பேர் சரி பார்த்துட்டிருந்தாங்க! ரெண்டு மணி நேரமாகும். அர்ஜெண்ட்னா நாலாவது பில்டிங்லயே ஒரு எஸ்.டி.டி பூத் இருக்கு'ன்னு சொன்னேன். அதுக்கு அவர் 'எனக்கு அர்ஜெண்ட்'னு சொல்லி வெச்சிட்டார்."

சுசிலா குறுக்கிட்டு, "பரத், நான் என்ன நினைக்கிறேன் தெரியுமா, அந்த கிரீடம் சம்பந்தமா பம்பாய்ல யாரையோ இவன் தொடர்பு கொண்டிருக்கான். அந்த கிரீடம் பம்பாய் போகப் போகுது. அதுக்காக யாரோ ஒருத்தன் நாளைக்கு அந்த ஐசி.594 ஃப்ளைட்ல புறப்பட்டு மெட்ராஸ் வர்றான். கரெக்ட்டா?" என்றாள்.

"அப்படித்தான் இருக்கணும். பம்பாய்க்கு எஸ்.டி.டி. கால் பேசணும்னு இந்த பாண்டியன் கேட்டது எத்தனை மணிக்கு?"

"ஈவினிங் அஞ்சே முக்கால் இருக்கும்."

"சரி, இந்த பாண்டியன் தங்கியிருக்கிற ரூமுக்கு ரூம் பாயா கடந்த ரெண்டு மூணு நாள்ல வேலை பார்த்தவங்க யாருன்னு பார்த்து கூப்புட்டு உக்கார வைங்க. நாங்க பக்கத்தில இருக்கிற எஸ்.டி.டி. பூத் போய் விசாரிச்சுட்டு வர்றோம். அதுக்கு முன்னாடி இந்த பாண்டியன் எப்படி இருப்பான்? கொஞ்சம் வர்ணிங்க, பார்க்கலாம்" என்றான்.

அவன் சொன்ன குறிப்புகளோடு மூவரும் அருகில் இருந்த இருபத்தி நாலு மணி நேரமும் இயங்கக் கூடிய அந்த எஸ்.டி.டி. பூத்திற்கு வந்தார்கள்.

அங்க அடையாளங்கள் சொல்லி, "இன்னைக்கு ஈவ்னிங் நாங்க சொல்ற இந்த ஆள் இங்கே வந்து பம்பாய்க்கு ஒரு எஸ்.டி.டி. கால் பேசினாரா?" என்றான் பரத்.

"பேசியிருக்கலாம் சார். ஞாபகம் இல்லை." என்ற பூத்



இளைஞன் அப்போதுதான் ஒரு எஸ்.டி.டி. கால் பேசி முடித்து விட்டு வந்த நபரிடம் கம்ப்யூட்டர் அடித்துத் துப்பிய பில் பார்த்து பணம் வாங்கி டிராயரில் போட்டான். அந்த ஆள் போனதும் பில்லை இயந்திரத்தில் இருந்து துண்டித்து அருகில் இருந்த மூங்கில் குப்பைக் கூடையில் போட்டான்.

பரத் அந்தக் குப்பைக் கூடையை கவனிக்க, அங்கே நிறைய பில்கள் நிரம்பி வழிந்தன.

"ஏம்ப்பா, போன் பேசறவங்க நீ கொடுக்கற பில்லை வாங்கிக்கிறதில்லையா?"

"நூத்துல ஒருத்தர்தான் பில்லை கேட்டு வாங்கிட்டுப் போவார். மத்தபடி பேசிட்டு பில்லைப் பார்த்து காசு மட்டும் கொடுத்துட்டுப் போவாங்க. நான் பில்லைத் தூக்கி குப்பையில போடுவேன்."

"நமக்கு லக் இருக்கான்னு பார்க்கலாம்" என்ற பரத் அந்தக் குப்பைத் தொட்டியில் கிடந்த பில்களை எல்லாம் வாரிப் போட்டு, "சுசி, பாரு, இதில இன்னைக்குத் தேதில ஈவினிங் அஞ்சே முக்காலுக்கு மேலே '022'ங்கிற பாம்பேயோட எஸ்.டி.டி. கோடோட ஆரம்பிச்சி ஏதாச்சும் பில் கிடைக்குதான்னு பாரு" என்றான்.

அரைமணி நேரம் மெனக்கெட்டதில் அன்றைய தேதியில் அந்த குறிப்பிட்ட நேரத்தில் பாம்பேக்கு மூன்று பில்கள் கிடைத்தன.

"நியூட்டன். இப்போ நாம என்ன செய்யறோம்னா உங்க ஆபிஸ் போய் உக்கார்ந்துகிட்டு பாம்பே போலீசை காண்டாக்ட் பண்றோம். இதில இருக்கிற மூணு டெலிபோன் நம்பர்களையும் கொடுத்து இந்த மூணு பார்ட்டியோட அட்ரசையும் தெரிஞ்சுக்கச் சொல்றோம்."

"அப்புறம்?"

"ஃப்ளைட்ல டிக்கெட் வாங்கின அட்ரஸ்ல இந்த மூணு அட்ரஸ்ல ஏதாவது ஒத்துப் போகுதான்னு பார்க்கச் சொல்றோம். ஒத்துப்போனா, இந்தக் கொள்ளைக் கும்பலை சந்திக்கிறதுக்காக நாளைக்கு பாம்பேலேர்ந்து வரப்போற பார்ட்டி யாருன்னு தெரிஞ்சுக்கலாம்" என்றான்.

ஒரு நீண்ட பெருமூச்சு வெளியேற்றினார் நியூட்டன்.

○

மறுநாள். இரவு 8.45.

I.C.594 விமானம் பாம்பேயிலிருந்து வந்து சென்னை விமான நிலையத்தில் இறங்கியது. ஸபாரி சூட் அணிந்த சுலைமான் சேட் சூட்கேசுடன் இறங்கினார். கட்டிடத்திற்கு

வந்து கன்வேயர் பெல்ட் அருகில் காத்திருந்து தனது மேலும் இரண்டு பெரிய சூட்கேஸ்களை எடுத்து தரையில் உருட்டிக் கொண்டு வெளியே வந்தார்.

ஒரு டாக்ஸி அமர்த்திக் கொண்டார். ட்ரிடெண்ட் ஹோட்டலுக்கு வந்தார். ஏற்கனவே அவர் பெயரில் பதிவு செய்யப்பட்டிருந்த அறைக்கு வந்து சேர்ந்தார். டாய்லெட் அறைக்குச் சென்று திரும்பி வெலவெலத்தார்.

எதிரே நான்கு போலீஸ்காரர்கள் அவரை நோக்கி துப்பாக்கியை நிமிர்த்திப் பிடித்திருந்தார்கள். நியூட்டன் அவரை எதுவும் கேட்காமல் இரண்டு பெரிய சூட்கேஸ்களை திறந்து வழிய வழிய அடுக்கப்பட்டிருந்த ஐநூறு ரூபாய் கட்டுகளைப் பார்த்தார்.

"இதில எவ்வளவு பணம் இருக்கு சுலைமான் சேட்?"

"இருபத்தஞ்சி கோடி."

"இதான் வைரக்கிரீடத்துக்கு நீங்க பேசின விலையா?" என்றவர் அவரை நெருங்கி, "எப்படி வசதி? எல்லாத்தையும் இங்கே இப்போ சொல்றீங்களா, இல்லை விதவிதமான விசாரணைகளை சந்திச்சு கடைசியா சொல்றீங்களா?"

"சொல்லிடறேன்" என்றார் நடுங்கியபடி சுலைமான் சேட்.

சொன்னார்.

"வெரிகுட். கிரண், ராவ், அலெக்ஸ் இந்த மூணு பேரும் வைரக் கிரீடத்தோட உங்களை எங்கே எத்தனை மணிக்குச் சந்திக்கிறதாப் பேச்சு?"

சொன்னார்.




ஒலித்த போனை பரத் எடுத்தான்.

"நியூட்டன் பேசறேன். சுலைமான் சேட் நாம சொல்லிக் கொடுத்தபடி நடிச்சார். திடுதிப்புன்னு சூழ்ந்துகிட்டு நாங்க அந்த மூணு பேரையும் அமுக்கிட்டோம். வைர கிரீடம் கைப்பற்றி விட்டோம். இதைக் கைப்பற்ற நீங்க செஞ்ச உதவியை ரிப்போர்ட்டஸ்கிட்டே கமிஷனர் சொல்லிருக்கார். நாளைக்குப் பேப்பர்ல உங்க பேரும் வரும்."

"தேங்க் யூ" என்று வைத்த பரத் சுசிலாவிடம் விவரங்களைச் சொல்லி, "பாவம், வயோலா பரிதாபமா செத்துட்டாளே..."

"அது சரி பரத். அவளை முதல் முதலா நீங்க எங்கே சந்திச்சிங்கன்னு இன்னும் ஞாபகம் இல்லையா?" என்றாள் சுசிலா.

"அது மட்டும் ஞாபகத்துக்கே வரலை" என்றவன் வயிற்றில் குத்திய சுசிலா, "என்னை என்ன வடிகட்டின மண்டுன்னு நினைச்சிங்களா? அவ சொன்ன க்ளூ வெச்சிப் பார்த்தா நீங்க காபரேக்குப் போய் அவ டான்சைப் பார்த்திருக்கீங்க. உண்டா, இல்லையா?"

"எப்பவோ நடந்த சம்பவத்துக்குக் கூட இப்ப ரியாக்‌ஷன் தர்றியே நியாயமா? அறியாப் பருவத்துல அறிஞ்சுக்கற துடிப்புல யாரும் செய்யறதுதான் சுசி."

"நீங்க எத்தனை நாவலானாலும் உருப்படவேப் போறதில்லை" என்று விட்டு வேகமாகப் போன சுசிலாவை...

"ஏய் சுசி! ஒரே ஒரு நிமிஷம் திரும்பேன்" என்றான் பரத்.

சுசிலா நின்று திரும்ப, அவள் பனியனில், 'Always Facing the Sky' என்பதை வாய்விட்டுப் படித்த பரத், "என்ன அர்த்தம்? இது மட்டும் ரொம்ப உருப்படியான விஷயமாக்கும்?" என்றவனை சம்பிரதாயமாக முறைத்தாள்.

○

## போனஸ் கமெண்ட் கந்தசாமி

